உ

# பரவெளித் தத்துவ நுண்மை விளக்கம்

# PARAVELI THATHTHUVA NUNMAI VILAKKAM

(சிவதத்துவ - ஒளி, வெளி ஒப்பிட்டாய்வு நூல்)

ஆக்கம்;

தொல்புரக்கிழார்,

புலவர் நா. சிவபாதசுந்தரனார்

ஆறுவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாடு

கோலாலம்பூர் – மலேசியா

1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில்.
2274

# அருளாது நிலைத்திறன்

அல்லது

# பரவெளித் தத்துவம் நுண்மை விளக்கம்

★

சிவதத்துவ - ஒளி, வெளி ஒப்பிட்டாய்வு நூல்

★

ஆக்கம்
தொல்புரக்கிழார்
பொருணூல் விற்பன்னர் – தமிழ்மாமணி
## புலவர் நா. சிவபாதசுந்தரனூர்
அவர்கள்

★

ஆறுவது
அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாடு
கோலாலம்பூர்—மலேசியா

**1987**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்பு: 1987

பதிப்புரிமை: நா. சிவபாதசுந்தரனுர், தொல்புரம், சுழிபுரம். P.O

வெளியீடு: தமிழ்ச்சங்கம், வட்டுக்கோட்டைத் தொகுதி.

அச்சுப்பதிப்பு: சுடரொளி அச்சகம், யாழ்ப்பாணம்.

விலை ரூபா 25-00

PARAVELI THATHTHUVAM NUNMAI VILAKKAM

A SCIENTIFIC STUDY OF

THE PHILOSOPHY ON SIVA

பொது சன நூலகம்
கொக்குவில்.
பதிவு எண் ~~6319~~ 2274
அறுப்பு எண் ~~494.8109~~ 181.45

First Edition: 1987


COPYRIGHT: N. Sivapathasundaranar, Tholpuram, Chulipuram.

PUBLISHERS: Thamil Sangam, Vaddukoddai Electorate.

PRINTERS: Chuderolli press, Jaffna.

Price: Rs. 25/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பரவெளித் தத்துவ நுண்மை விளக்கம்

என்ற இந்நூல்

யாழ்ப்பாணம்

அருளாளர் அணியில் அமர்ந்து

எமக்கெல்லாம் ஏற்றம் புரிந்த தவக்கருணையர்

## யோகசுவாமிகள் அவர்களின்

தியானத் திருவுருவுக்குக் காணிக்கை

— ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில்.

எஸ். டிவகலாலா
பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

# வெளியீட்டுரை

வட்டுக்கோட்டைத்தொகுதித் தமிழ்ச்சங்கம் பண்டிதர், புலவர் வித்துவான் என்போரை உறுப்பினர்களாக உடையது. தமிழ்மொழியை மரபுநிலை மங்காது பேணிக் காத்து வருகிறது. இளைஞர்களுக்குத் தமிழ்மொழியை வரன்முறையாகக் கற்பித்து வருவதோடு சீரிய ஆய்வு நூல்களை உறுப்பினர்களைக் கொண்டு எழுதுவித்தும் - பேசுவித்தும் வருகின்றது. இதில் நமக்கு முன்னோடியாக முனைந்து முதன்மைப்பட்டு நிற்பவர் இந்நூலாசிரியர் திரு. புலவர் நா. சிவபாதசுந்தரனுர் அவர்கள். இவரின் இரண்டு நூல்களை நமது சங்கம் வெளியிட்டுப் பெருமை பெற்றுள்ளது. அவையாவன; "புறப்பொருள் வெண்பாமாலை ஆராய்ச்சி" "பரவெளித்தத்தும்" அல்லது பதிமுதுநிலைத் தோற்றவிளக்கமாம். இதுபோது பரவெளித்தத்துவ நுண்மை விளக்கம் அல்லது அருளது நிலைத்திறன் என்ற நூலையும் வெளிப்படுத்தி அகங்களிக்கிறது. இந்த நூல் உலகத் தமிழ் ஆராய்ச்சி ஆறும் மாநாடு - கோலாலம்பூர் மலேசியாவுக்கு அனுப்பிய கட்டுரையின் விரிவுநூல், இந்நூல் வெளிநிலையிலும் ஒளிநிலையிலும் சிவதத்துவம் எவ்வாறு இயைந்து விளக்கமாவதைத் தெளிவுபடுத்துகிறது. இத்தெளிவில் பெளதிக விஞ்ஞானத்தின் இணைவும் தமிழ்மொழியின் வரிவடிவின் தத்துவத்தலைமைப்பாடும் சுடர்விடுகிறது. இத்தகு இனியதோர் நூலை நமது தமிழ்ச்சங்கம் மூலம் வெளியிட இசைவு தந்த நமது புலவர் அவர்கட்கு நாம் பெரிதும் கடப்பாடு உடையோம். இவரைப் பண்டிதமணி, இலக்கிய கலாநிதி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் "பொருள்நூல் விற்பன்னர்" என்றும், ஈழத்து நாவலர்சபையார் "தமிழ்மாமணி" என்றும் பராட்டி மதிப்பளித்தது தகுந்ததோர் நிகழ்வு என்று நமது சங்கம் நினைந்து மகிழ்ந்துள்ளது. இத்தகைய நம் நண்பர் திரு. நா. சிவபாதசுந்தரனுரின் தமிழ்நிலையால் நமது சங்கத்தின் நலப்பாடும் பாடுபெற்று சால்புறுகிறது. எனவே வழமைபோல் இந்நூலையும் தமிழ்மக்கள் வாங்கிப்படித்து இன்புறுவார்களாக.

பண்ணாகம் தெற்கு,
சுழிபுரம்
1-7-1987

பண்டிதர், அ. ஆறுமுகம்
சங்கத்தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்துரை.

ஒளிவடிவை ஓர்ந்து உற்று நோக்குவோமாயின் அது சிவந்த நிறம் அல்லது பொன்னிறம் உடையதாயும், அந்நிறத்தின் கண்ணே அடங்கிய ஒருசிறு நீலநிறமும் உடன்கூடியதாயும் இருத்தலை அறிந்து கொள்ளலாம். தீயின்றன்மை கடுந்தன்மையே யாகும்; தீயின் நிறமுஞ் சிவந்த நிறமேயாகும். அத்தீயின்கண் அடங்கிய நீரின்தன்மையோ குளிர்ந்த தன்மையாகும். அந்நீரின்நிறமோ நீலநிறமாகும். மேலும், வன்றன்மையுடைய தீ ஆண்தன்மையது என்றும், மென்றன்மையுடைய நீரியல் பெண்தன்மையது என்றும் பகுத்துணர்ந்து கொள்ளல் வேண்டும். ஆனதனால்தான், வன்றன்மையுஞ் சிவந்த நிறமும் உடையவன் சிவபிரான் என்றும், மென்றன்மையும் நீலநிறமும் உடையவள் உமைப்பிராட்டி யென்றுந் தமிழ்நூல்களெல்லாம் ஒத்து ஒருமுகமாய் உரைக்கின்றன. அவ்வுண்மைக்குத் "சிவனெனு நாமந் தனக்கேயுடைய செம்மேனி எம்மான்" என்னும் அப்பர் திருவாக்கும், "நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன்" என்னும் பழைய ஐங்குறு நூற்றுச் செய்யுட் சொற்றொடருமே உறுபெருஞ்சான்றாம் என்க. சிவன் என்றுஞ் சொல் 'செவ்வேள்' என்னும் முருகப்பிரான் பெயராகப் பண்டைத் தொல்காப்பிய நூலுள் ஓதப்பட்ட "சேயோன்" என்னுஞ் சொல்லின் பரிணாமமேயாகும். இது மொழியியற்சார்பில் இயைந்ததோர் கருத்தாகும். செவ் - செள் - செய் - சேய் - சேயோன் ஆயிற்று.

பூமத்திய ரேகைக்குத் தென்பால் $23\frac{1}{2}$ பாகையில் இருந்து தென்சமுத்திரம் வரையும் ஒளிநாடு குமரிக்கண்டத்தின் பகுதியாக விளங்கும். ஒளிநாட்டின் ஆறுதென் தமிழ்நாட்டின் கடைசி ஆறு ஆனதால் திருமூலர் "ஈறானகன்னி" என்றார். தென் அயனவரைத்தாண்டிச் சூரியனுடைய ஓட்டம் இன்மையால் ஒளிநாடு ஒளிமேகங்களாற்றான் வெளிச்சத்தைப் பெற்று வந்தது. "ஒளியராவர் பிறமண்டலங்களை அரசாளுதற்கு உரிய வேளாளர்" என்று கலித்தொகை உரையில் நச்சினாக்கினியர் கூறுதலால் ஒளிநாட்டு வேளாளர்க்கு இடபக்கொடி உரியது. (சே - எருது; சேயோன் எருது விடை ஏறியவன்) அவர்கள் மூன்று கண்களை உடையவர். மாயாமலம் இல்லாதவர்கள். இவர்களே குமரிக்கண்டத்துத் தென்பால்தோன்றிய கடல்கோள் நிமித்தம் வேங்கடம் கடந்து இமயம் சென்று கயிலையை இரண்டாம் அரசிருக்கையாகக் கொண்டு வடநாடு முழுவதும் ஆட்சிபுரிந்தவர்கள். மறைஞ்சதரை அரப்பா நாகரீகங்கள் எல்லாம் அக்காலத்தில் ஏற்பட்டவையே. இந்த ஒளியருக்கு முன்னமே சேர சோழ - பாண்டியர்கள் மாறிமாறி அவ்வடநாட்டை ஆண்டவர் என்பதையும் நாம் மனத்தில் கொள்ளவேண்டும். தென்ஒளியர் வடஒளியராய் வாழ்வு வளத்தில் மிகுந்ததும் அவர்களின் கன்னித்தமிழ் சிந்தனையில் செம் - செவ் - சிவ் - சிவ - சிவம் சிவன் என்று ஒளியோனைச் செப்பி இலிங்கம் அமைத்து வழுத்தினர். ஒனியர் - தம்மைக் கையிலைப் பாங்கரில் தே(ஒளி)வர் என்று மாற்றுப்பெயர் கொண்டும் ஆங்கு வாழ்ந்தனர் தென்னகத்தில் ஒளிமேகங்களால் ஒளியை ஓர்ந்தவர்கள் வடவகத்தில் ஒளியோனாகக் காட்சிப்பட்ட வெஞ்சுடரோனையும் ஓர்ந்து செம்பொன் ஒளியையும் அதன் உள்ளீடான நிலவெண்ணொளியையும் கண்டு குறிசெய்து செவ்வு, சிவ்வு, சிவம் - சிவன் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில்.

பெயர் கொண்டது வியப்பில்லை. கன்னிநாட்டுத் தென் ஒளியர் வடநாட்டு ஒளியராய் நின்று தேவர் என்று பெயராய்த் தென்திசை மீண்டும் சிவபெருமான் என்று புகுங்கால் முதல்வன், முனைவன், சேயோன், இறையோன் முதலான பெயர் சுட்டியதெய்வத்தைச் சிவம் - சிவன் என்று மறுபெயர் சுட்டியும் சி - சிவ - சிவயநம - நமசிவய என்ற ஐந்தெழுத்து மந்திரத்தையும் நிலைநாட்டித் தென்னாடுடைய சிவ இறையோனை எந்நாட்டுக்கும் இறையோனுக்கினிர் என்று தேர்தலே நம்கடனும். இந்த சிவ இறையோனைச் சிறப்பாகத் தமிழில் நினைவுறச் செய்தவர் திருமூலநாயனார் என்க.
அதாவது;

"பாசம் பயிலுயிர் தானே பரமுதல்
பாசம் பயிலுயிர் தானே பசுவென்ப
பாசம் பயிலப் பதிபர மாதலாற்
பாசம் பயிலப் பதிபசு வாகுமே" திரும: 2384

என்றும்;

"சிவன்வந்து தேவர் குழாமுடன் கூடப்
பவம்வந் திடநின்ற பாசம் அறுத்திட்டு
அவனெந்தை யாண்டருள் ஆதிப்பெருமான்
அவன்வந்தென் னுள்ளே யகப்பட்ட வாறே" திரும: 2934

என்றும் நுண்மையான ஆன்மவெளியகத்து ஒளித்திறனும் ஒளிர்வதையும்; பருமையான ஆன்மவெளிப்புறத்து வெளிஒளியாய் நின்று திருக்கூத்து புரிவதை;

"தெற்கு வடக்குக் கிழக்குமேற் குச்சியில்
அற்புத மானதோர் அஞ்சு முகத்திலும்
ஒப்பில்பே ரின்பத் துய்ய உபயத்துள்
தற்பரன் நின்று தனிநடஞ் செய்யுமே திரும: 2693

என்ற செய்யுளால் புலப்படுத்தப்பட்டுள்ளது. இதனைத்தமிழ் எழுத்துக்கள் மூலம் புலப்படுத்தியுள்ளேன். ஆன்றோர் அதனையும் ஆய்வாராக,

இத்தகுநூலை அச்சுப்பதிப்பிக்க முயலுங்கால் சுடரொளி அச்சகத்தலைவர் திருமதி சம்பந்தன் அவர்களின் அரவணையில் உள்ள தொழிலக வினைவலரின் விடாமுயற்சியுடன் நூல் வடிவம் பெற்றது. இந்த நூலின் பொருளைத் தாம் கற்ற விஞ்ஞான அறிவோடு சித்தாந்தக் கருத்தைப் பல்கால்சிந்திக்கும் சிந்தனையாளராகிய ஏழாலை சைவப்பெரியார் சித்தாந்த வித்தகர் திரு மு. ஞானப்பிரகாசம் BA; Bsc அவர்கள் ஆங்கிலத்தில் கருத்துரையும் எழுதித் தந்துள்ளார். இவரும் இனிய அச்சகத்தார்க்கும், வட்டுக்கோட்டை தொகுதி தமிழ்ச் சங்கத்தார்க்கும் நன்றி கூறும் கடப்பாடுடையோன். வணக்கும்

தமிழ்நிலை,
தொல்புரம், சுழிபுரம்
3 - 7 - 1987

இங்ஙனம்
நா. சிவபாதசுந்தரனார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்பொருள்கள்.

1. நூன்முகம்

2. ஒளியும் - வெளியும்

அ. ஒளிவெளி: பராபரம்

வெளிப்புஒளி – இறுபொருள்

ஒளிவெளிப்பு – இறைபொருள்

ஆ. வெளிஒளி: பராபரை

3. வெளி: பரவெளி

அ. வெளிஇயக்கம்

ஆ. வெளிஇயக்க அமைவு

இ. வெளிஇயக்க வடிவம்

பரநிலைவெளி

அ. வெளிப்பொருள் - அருவம்

ஆ. வெளிஒளிப்பொருள் - அருவுருவம்

4. சிவதத்துவம் தழுவும் விஞ்ஞானம்

அ. சிவ - பொதுவிளக்கம்

ஆ. சிவ - சிறப்பு விளக்கம்


பராபொருள் – சி : வ

பராசத்திப்பொருள் – சி : ய.

5. நிறைவுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில்.




இந்நூலாசிரியர்

தொல்புரக்கிழார்

பொருணூல்விற்பன்னர் – தமிழ்மாமணி

புலவர் நா. சிவபாதசுந்தரனார் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில்.

# நான்முகம்

## ஒள்: ஒள்ளு; இறுபொருள்:

ஒள் - பொருள். ஒளி - அப்பொருளின் இயக்கம். ஒள்ளு அவ் இயக்கத்தின் வடிவம். எனவே ஒளி - ஒள் உடையதென்றும்: ஒளி - ஒள்ளுவாகச் சிறந்திடும் இயல் உடையதென்றும் நாம் தேர்வு கொள்ளலாம். இந்த முறையில் ஒள் என்பதற்கு ஒளியானது பரிணப்பொருள் என்பதும், ஒள்ளு - பரிணுமப் பொருள் என்றும் சொல்லப்படும். ஒள் - இகர ஈறுடையதாகும் போது அப் பரிணத்தை உணர்கின்றோம். ஒள் என்ற பொருளின் உள்ளுள்ள ஒளிப்பொருண்மைகள் ஆங்கு வளைதல் முறையில் இயங்கலால் அஃது ஒளி விளக்கமாகிறது. இந்த விளக்கம் இசைவில் இயைந்த அந்த ஒள்ளிய பொருள் உகர வரி (எழுத்து) வடிவாய் பருவிளக்கமானதும் அவ்ஒள் "ஒள்ளு" என்ற நிலைப்பெயர்த்தாயிற்று. அந்தப் பருவிளக்கத்தைச் சிந்தித்த பெரியோர் புள்ளி போல் நிற்றலான ஒள் சிறுசுழிபோல் அசைந்து, அந்த அசைவதிரால் உள்முக வளையாக மேலெழுந்து கீழிறங்கி (இஃது ஒற்றைக் கொம்பு (ெ போலது) நின்று பின்நேர் வரை (கோடு) யாக நீள்தலை உணர்ந்தனர். இந்த உணர்வில் உயர்ந்த உரவோர் புள்ளி சிறு சுழிவட்டமாய்ப் பருப்பமானது ஒளி என்ற விந்தாகவும், அஃது இடையீடின்றி தொடர்ந்து நேர்கோடாக நீண்டது; அந்த ஒளியிடத்து இசைந்து நின்ற ஒலிமையை நாதம் என்றும் எடுத்துரைத்துள்ளனர். இவ்வாறு ஒள்ளில் ஒல்லும் ஒலியோடு மிருந்த ஒளியாம் ஒள்ளே ஒள்ளு என்று பிறிதொரு பெயரால் ஒள்ளின் இயக்கவடிவம் பெறச் சுட்டினர். ஒள்ளில் ஒல்லுவது ஒலி, அந்த ஒலி அதன் ஒலியில் நெகிழ்வின்றி பொருந்தல் இறுகலாம். எனவே ஒளியில் அவ் ஒலி இறுபொருளாதல் முறையுடைத்தென்க. ஒள் என்பது ஒளியானதும் அந்த ஒளியில் ஒலி ஒளிப்பிடமாக்கியது. ஒளித்தலான ஒலி அவ்விடத்திலிருந்து கிளர்ந்தெழுகையில் ஒளிர்தலாகும். இதனை ஒளிறு - ஒளிறுதல் என்பர். ஒளிர்தல் - ஒளிவீசுதல், இஃது ஒளியின் பருமைநிலை. இந்தப் பருமைநிலையான ஒளியுடைய ஒள் இறுபொருளாம் ஒல் உடையதால் ஒள் என்பதை இறுபொருள் என்றல் நேரிது. இறுபொருள் விளக்கும் ஒள்ளினையே ஒளிறு என்பதும் ஓர்க ஒள் + இறு = ஒளிறு ஆதலாகும்.

## ஒள்ளு: ஒள்ளி; இறைபொருள்.

ஒள் - பொருள் என்று பொருந்த உன்னுகையில் அந்த ஒள்ளானது "பிந்தொள்" என்றே உன்னவேண்டும் என்பதே தத்துவத்தின் முறையாகும். பிந்த் + உ - பிந்து. துளிபிந்து - பிந்த் - கூறுபடுதல் என்ப. கூறுபடுகையில் துளியளவான ஒள் என்பதே ஒளிறு என்ற ஒள்ளுவாக - இறுபொருளாக நேர்ந்ததென்க. இந்தப் பிந்தொள்ளானது இகர வரி (எழுத்து) நெறியாக அசைந்தியங்கி ஏறுநிலையாகச் செலவுறுகையில் நாதஒள்ளாகி (ஒலிஒளியாகி) நாதாந்த எல்லை உச்சியின் மேல்நின்று அதனது கீழ் எல்லையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகும் இதுவே உகரத்தில் உற்ற (ெ) ஒற்றைக்கொம்பு பகுதியான நாதாந்தப் பரயி பின் இறு எல்லையில் அந்த நாதஒள் இறுபொருளாய்ப் பொருந்தியிடும். பொருந்திய நாதஒள் ஆங்கு எழுவாய்ப் பொருளாகவும் அமைந்திடும். இதனையே காரண சதா சிவம் என்று சிவதத்துவம் செப்பியதென்க. பரப்பொருள் - பரம்பொருளாய் - நாத ஒள்ளாய் விளங்கி நிலைத்தபின் அதன் ஆற்றலாம் சத்தி செயற்படுபொருளாய் அந்த இறு எல்லையிருந்து கீழ்பாகத்தின் கடை எல்லைவரையும் இறங்கிச் செலவுறுதற்கு எழுந்து பொருந்திய சத்திப்பொருளாய்ச் சாலுறும். அச்சாலுறும் பொருளையே பராசத்தி என்று தத்துவம் பகர்ந்தது, சத்தி பொருளான நாதஒள் - ஒள்நாதமாகக் கீழ் மேலாகக் கிளர்ந்து நாதம் (அபரவிந்தாயும்) விந்து (பரவிந்தாயும்) உகரத்தின் நீண்ட நேர்கோட்டின் பகுதி ஒளிறுவாக இறங்கு பரவெளியை வகுத்துக்காட்டும் முறையதாய் கீழ்உறலாயிற்று. அவ்வாறு இறங்கலான சத்திவனப்பான பரஒள் இறங்கு பரவெளி மையத்தில் பரவிந்தின் அகத்தில் அபரவிந்து காரியம் பொருளாய்ச் சிறந்து புள்ளியுற்று உகரவரிவடிவாய் இயங்கலாயிற்று. பரவிந்தின் அகத்து அபரவிந்து இறுபொருள் இசைந்து செயல்படுகையில் அவ் அபரவிந்து "இறை" என்று இறைஞ்சப்பட்டது. ஏறுநிலைப் பரவெளி இறுஎல்லையிற் சிவ பரம்பொருளாம் ஒள்ளு இறங்குநிலை மையஎல்லையில் வசி பரம்பொருளாய் ஒள்ளியாய் இறையோன் ஆயிற்று. ஏறுநிலையில் பரஒள் இறுதல் என்று செயற்படுபொருள் குன்றிய பொருளானது இறங்குநிலை மையத்தில் இறுத்தல் என்று செயப்படுபொருள் குன்றுத பொருளாய்த் தங்குதலை இயலாயும் அழித்தலை இயல்பு ஆகியும் நிலைகொண்டதை ஆன்றோர் உணர்வர்.

ஒள் என்ற பொருளின் பொருண்மை நாதவிந்தாய் விருத்தி நிலையாய் நிலைப்பட்டதும் அஃது ஒள்ளு ஆயிற்று. அதாவது ஒள்ளின் ஒளியே ஒலிமை இயலாய் இலங்குவதாலும் ஒள்ளின் ஒளிமை இயலாம். ஒள்ளின் ஒளிர்மை இயல்பாம். ஒளியில் இறுவான ஒல்லின் நிற்றல் ஒலிப்பே மீள இருத்தலான "நிலை ஒலிப்பு" ஆக இயலுகையே ஒளியினது எரி ஒலிப்பாகும். இந்த எரி ஒலிப்பை ஒளி ஒள்ளில் ஓர்ந்து கொள்ளவே ஒள்ளி என்ற இறைப்பொருள் என்க. இதுவே உலக முதற்சிவம் என்ற சதாசிவலிங்கமாகும். அவ் ஒள்ளியே இலிங்கம் என்று குறிப்பொருளாம். இதனையே திருமூலர் அருளோனாகிய (வசி) சதாசிவக்கடவுள் என்ற நல்லொளி முத்து என்றார். இதுவே மண்தலமாகிய நிலவுலகத்துள்ளே விளங்கித் தோன்றும் ஒளியுடைய ஞாயிறும். இதுவே நமது உடலிடத்து மூலாதாரத்து விளங்கும் ஞாயிறுமாகும். இதுவே மிடற்றின் (விசுத்தி) இடத்து கதிர்காலும் ஒளியாத்திகழும் "என்னுள் இருக்கும் இனையா விளக்கினை; அன்னமயம் அன்று அறிந்துகொண்டேனே" என்று திருமூலரே திருவாய் மலர்ந்துள்ளதும் ஓர்க. சீவனெனச் சிவனென்ன வேறில்லை (திரும 1979) என்பது போல ஒள்ளியாம் இறைபொருள் இடமும் இடத்து நிகழ்பொருளும் போல் கலந்து காண்பதன்றி தனித்துக்காண இயலாத் தன்மையனை ஒக்கும். அவ்ஒள்ளியாம் சிவ இறையே தென்திசைக்கடவுளாம் சிவமாம் இறையோன் ஆலில் கீழ் ஒரு நால்வருக்கு உரைத்த அறம் முதல்நான்கு மறைகளையும் காரணம் முதல் ஒன்பது ஆகமங்களையும், மறையங்கம் ஆறினையும் ஒழுக்கநூல்கள் பதின்எட்டினையும் ஓதினார். இவரே மகேந்திர மலையில் இறையனார் என்று வந்து மறுபடியும் பெருவளநாடு முதலிய ஏனைய நாடுகள் உய்ய வெளியிட்டார். இதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மன்று மாமலை மகேந்திர மதனில் முன்
சொன்ன ஆகமம் தோற்றுவித் தருளியும்

என்று மணிவாசகப் பெருமான் கூறியுள்ளார். அப்பர் அடிகளும் அறம், பொருள் இன்பம், வீடு ஆறங்க வேதம் தெரித்தானை" என்றும் அறைந்துள்ளார், இவ்வாறு இறை இறையோனைச் சிவமாகியும் சிவன் என்று கூறையனராகிய சிவத்திறனையும் இயைதல் ஒள்ளியதின் ஒட்பம் என்க.

பரஒள் என்ற பிந்து ஏறுநிலையில் ஒள்ளு என்று பிரகாச நிலைப்பொருளாயும் இறங்குநிலையில் ஒள்ளி என்று பிரகாசத்தைத்தரும் நிலைப்பொருளாயும் பாகம் என்ற முறையைப்பெற்றது. பாகம் - கலை எனப்பட்டது. கல என்னும் முதனிலையே ஐ ஈறுய் கலை எனப்படும். அந்தக் 'கல' என்னும் முதனிலைக்கு நீக்கலும் நியமித்தலும் பொருளாகையால் இருளை நீக்கிப் போகநியமனத்தைச் செய்வதே கலையாம். ஒள்ளி பாகமுறை நிலையதுவானதும் அதன் வனப்புறுத்தும். இயவுள் அவ்வனப்பை நீலவெள்ளை வண்ணமாய் உறுத்தி விழுமியதாக்கியது. இந்த வண்ணத்திறனின் நீலம் இருளைப் போக்கலும், வெள்ளை - போகநியமித்தலும் கொள்ளும். இந்த நீலவெள்ளை நாதாந்த ஒல்ஒளிப்பரப்பின் கீழ் எல்லையில் விளக்கம் பெறுவதாம், இதனையே மாது ஒரு பாகமுடைய பரம்பொருள்ஒளி என்றனர். நிற்க;

பரஒன் பரஒள்ளியாய்ப் பரம்பொருளானதும் அதன் பராசத்தி ஒளிவெளியாயும் வெளிஒளியாயும் பாகமாகவே வடிவுறும். அந்தப் பாகமுறையான ஒள்ளியலில் வெளிஒளியின் இயல்பில் ஒளிவெளி பாகமாக மிகுந்ததாம். இந்த மிகு ஒளிவெளி மாயா என்று ஓதப்பட்டது. மா - கருமை, யா - யாப்பு. கருநீல வனப்பு வண்ணத்தால் வெளி ஒளியில் ஒட்டாய் யாப்புற்றது என்பதே மாயா என்பதின் சொற்பொருள். ய என்ற எழுத்துப் போலக் குறியாகும் உயிர்களின் வெள்ளறிவை மயக்கிக் கட்டுப்படுத்தி அதனிடத்துச் செயல்படுதலால் மாயா - மாயை என்று உரைக்கப்பட்டது. மாய் + ஐ - மாயை. ஐ ஈறு செயற்படுபொருள் தரும். இனி ஐ தலைவன் என்றும் பொருள் தரும். இதில் மாய்தல் நிகழ்வுக்குத் தலைவனை இறைசுட்டும். அப்போது இறையோன் செயல். நிலையில் "மாயோன்" என்ற பெயர் பெறுவர் இதனைப்பின் வந்தார் "மாயாநாடன்" என்பர். மா - ஒடுக்கம். யா தோற்றம். ஒடுக்கமும் தோற்றமும் பெறும் இடமாதலால் அந்தக் கருநீல ஒளிவெளி மாயா எனப்பட்டதென்பர். இந்த இடவுருவம் "ஓங்காரம் போல் எல்லாம் வளைந்து நிற்றல் உருவம்" என்பர். கருநிலை ஒளிவெளி வெளிஒளியின் பாகப் பொருளாதலின் வெளியினது ஒளி அதன் மீது படும்போது வெளிச்சத்துக்கு நேரிட்ட முதல் பாகம் பிரகாசமாயும் இடையிட்டபாகம் சற்றுக் குறைந்த பிரகாசமாயும், கடை (அடி)ப்பாகம் பிரகாசமே பொருந்தாப் பாகமாயும் பொருந்தலைப் பெரியர் உணர்வர். பிரகாசம் நன்கு பொருந்திய பாகம் சுத்தமாயை என்றும், பிரகாசம் இடைநிகராய்ப் பொருந்திய பாகம் அசுத்தமாயை என்றும், பிரகாசம் பொருந்தாத கடைநிலைப்பாகம் பிரகிருதி மாயை என்றும், மாயை வகுத்தலாயிற்று. இதனை மாயை தன் காரியங்களால் ஆன்மாக்களைப் பந்தித்து நிற்கும் திறத்தால், சுத்தாத்துவா மிச்சிரத்துவா அசுத்தாத்துவா என்றும் இயம்பும் சொற்பிரயோகத்தால் தேர்க. நிற்க;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒள்ளியின் ஒளிமை ஒளிவெளியாதல் "சி" எழுத்துக்கு ஏற்படும். வெளிஒளியாதல் வ எழுத்துக்கமையும். ய எழுத்துக்கு வெளிஒளியில் பாகமான கருநீல ஒளிவெளிக்கு ஒப்பாகும். ஒளிவெளியையும் வெளிஒளியையும் தொகுத்து ஒன்றுக நோக்கையில் சிவ என்ற ஓரெழுத்தாம். தொகுக்காது வகுக்கையில் சி - விடாத எழுத்து. வ - விட்ட எழுத்தாக நேரப்படும். இந்த விட்டஎழுத்தாம் வகரக் குறிஎழுத்து வெளிஒளியாத லின் அந்த வெளிஒளியின் பாகமான கருநீல ஒளிவெளி யகரமாகப் பொருந்தக்கண்ட தாதலின் "வய" என்று இசைந்திடும். எனவே விடாத எழுத்தாம் சியினது ஒளிவெளி சிவவெளியாம். இதனது மாற்று ஒளிவெளியாம் "வெளிஒளி" யை வகரமாம் அருள் வெளியாம். வெளிஒளியினது பாகமாம் ஒளிவெளியே யகரவெளியாம். இந்த யகரவெளி யாம் பொருள்வெளியிலே பரவெளி - அண்டவெளி, மனவெளி என்பவை ஏற்புடைய தாகும். எனவே பரவெளி - சிவய என்று, தொகுநிலைவெளியாயும் அண்டவெளி - சி - வய என்று, வகுப்புநிலைவெளியாயும் மனவெளி சி - வ - ய என்று முப்பகுப்புநிலைவெளி யாயும் ஒளியையும் வெளியையும் மேலும் ஆன்ருேர் ஆராய்வாராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INTRODUCTION AND FORWARD

**SHRI M. GNANAPRAKASAM**
President
Thiruketheeswaram Temple Society

## Introduction

To the Hindu, Religion is spiritual adventure always oriented towards eternity. Throughout his long history, he never lost his contact with eternity. It is the voice of eternity that compels the Vedic seer to address us, humans, as children of eternity - amritasya putra! And when this Vedic voice is over-powered by this vision of eternity, it comes out the famous vedic chant, pro-claiming that there is perfection here, perfection there and perfection every - where - Purnam adah Purnam idam.

Even the codifiers of the Hindu Dharma said, that their Dharma was the smooth but ever flowing Sanatana Dharma well installed on the rock of eternity.

The Agamic saints of the Hindu - fold were more concerned about a central reality about which the entire universe of beings and non beings revolves. These Agamic saints were master minds, who had their abodes in the most remote spiritual regions of pure consciousness. To them the central principle they were seeking for, was not very different from eternity. Their central principle of reality was the ever perfect God. Not within the reach of the words and thoughts of a worldly mind. To them he was Vedyam, inexpressible and unthinkable.

In the Thamil country, true to our age long tradition of Siva worship we call this central reality.

"Sivam, Santham and Sundaram". He is our God of Gods and our Lord of Lords. His dancing hall are the three worlds. He is the King of dancers. The audience, actors and the stage are evolved and ordered by him. All this is done by own self in association with his Sakti.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Siva, the Lord of all Lords is not controlled by the modern scien_ tific laws whether physical, biological, or psychological. Nor is he controlled by the ancient laws of the evolving and involving cosmas. The spiritual impulse for all these laws and movements come from him. Nobody has yet gone into the inner chambers of Siva for the purpose of studying the nature magnitude and direction of this mysterious impulse.

It is true that science and scientific discoveries have helped us humans in a number of ways. But to us who have taken up to a life of dedication to God in faith and in love. These scientific laws have made us more and more convinced that God is the grand law maker, to all of us who have knowingly fallen into this deep mire of human predicament.

The author of this paper 'பரவெளித் தத்துவம்' Pulavar N. Sivapathasun-tharanar of Tholpuram, Sri Lanka is a Thamil Student who is deeply interested of the study of the most abstruse tatvas normally stated as the suddha mays tatvas of the Saive Siddhanta philospehy. All schools of saiva thought agree with each other in their explanation of the lower tatvas that are in 31 in number. About the topmost 5 tatvas they differ from each other in their mode of approach. their way of thinking, and their axis of thought.

The author in all his seriousness attempts to explain all the above 5 tatvas with the help of all physical theories that deal about the travelling light through etheral space. The tatanmya sambandam between Sivam and Sakthi and the intricate parts connected with them are also well explained.

We wish the author all success and reward for his rare endeavour.

Sivaprakasa Puram
Elalai, Sri Lanka.

Sgd. **M. GNANAPRAKASAM**
15-7-87.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில்.

# அருளது நிலைத்திறன்

அல்லது

# பரவெளி தத்துவம் நுண்மை விளக்கம்

★

## 1. ஒளியும் வெளியும்.

### ஒளிவெளி: பராபரம்

பரம்பொருள் பராவகத்தில் ஒளியியலாகப் பரத்துவப்படுதலால் அப் பராவகம் மேன்மையாகி ஒளியே வெளியாகப் பாடுறும். மேன்மை ஒளி வெளியே 'பராபரம்' என்பது. பரமானது பராவகத்தில் ஒளியாவதற்குப், அவ்வொளியே வெளியாக விளக்கம் பெறுவதற்கும் ஓரியல் அப்பராவகத்தில் மேன்மையெனப் பொருந்தியதாதல் வேண்டும் என்க. அவ் ஓரியல் எது? என்பதற்கு 'மேன்மை' என்ற சொற்பொருளை அறிவுறல் வேண்டும். பராவகத்தின் உள்ளே உற்ற 'அண்' இயல் அண்ணி - அண்ணி இயல்கையில் ஆங்கு 'அணு' என்ற பொருண்மையானது அணு-அணுவாக 'அள்' உற்று (அள் - கூர்மை) முற்செல்லுதலாகும். அச் செல்கை உள்ளொடுங்கலானது. உள்ளொடுங்கலாய் முற்படுவுற்று கூர்மை கொண்ட அணுப் பொருண்மை அளைதலாகி எரிமையதாய்க் கிளம்புகையில் 'கிளர்' என்ற எரிஒளிமை மேலகத்துள் விசலால் அம் மேலகம் பரத்துவப்படும். பரத்துவப்பட்ட மேலகமே 'பராவகம்' என்று பேசப்படுவது. பரத்துவமான மேலகம் 'ம்' (இம்) என்று பொதுப்பட்டு, அப்பொதுவில் ஐ (அய்யன்) என்று சிறப்பு ஒன்றிச் செம்பொருண்மையாய்ப் பாடுறலே ஓரியலாம் (மேன்)'மை' என்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பராவகத்தின் மேற் பொருண்மை 'ஐ' என்னும் உயிர் எழுத்தாற் தேர்ந்தோம். இந்த 'ஐ' காரம் 'அ—இ' கூட்டால் இயன்றது இயன்ற ஐகார உயிருக்கு மெய்யாக ஈண்டு நின்ற 'ம்' (இம்) என்ற மாயை குறிக்கும் தத்துவ எழுத்து அகரம் ஒன்றிய பெற்றியால் 'ம' என்று நடப்பாற்றலாகத் தத்துவப்படும். நடப்பாற்றல் — ஆதிசத்தி. இகர ஒலி அகரத்துள் இணைந்து அந்த மெய்யகத்தில் ஒன்றுகையில் ஒலிமைத் திரிபால் மகரம் எதிர்நிலையாய் மாற்று வடிவமாயிற்து. அவ்வடிவம் 'வ' என்பது. வ — வனப்புச்சத்தி. மகாரத்தின் மிகுதத்துவமாகும். வனப்புச்சத்தி — பராசத்தி. பராவகம் மேன்மையாகும் முறையும் இஃதென்க. பராசத்தியே 'பரா' என்று குறிப்பிடப்பட்டது. எனவே அது பரவுசத்தி எனலாம். பராவகம் மேன்மையாகத் தத்துவ முறையில் நெறிப்பட்ட இயலையே 'பண்ணல்' என்பது. ஆதிசத்தியே — பரவுசத்தியாய்ப் பண்ணலான ஒளிமையே 'பரஒள்' என்று பகர்ந்ததென்க. பரந்த சத்துமையாகப் பண்ணலின் பக்குவப்பொருளே 'பரவுஒள்' என்க. 'பரவுஒள்' பரவெளிக்கே உரியது. இப்பரவெளியில் ஏறுநிலைப் பகுதிஒளியே வெளியாயும், இறங்குநிலைப் பகுதி வெளியே ஒளியாயும் பாகப்படலே 'ஒளியும் வெளியும்' என்று நாம் குறிக்கும் நிலைத்தாயிற்று. பரவுஒள் என்பது 'பாபிந்து' என்க. இந்தப் பிந்தொள்ளில் ஒலிப்பண்ணுகை உளவாகையில் ஒள் — ஒல் என்ற ஒலிமையாகிப் பரபுலத்திற் புல்லிக்குலவு கொள்ளும். அதன் 'குல்' இயலில் அகல்வு வீச்சும் பெருக்கமாய்ப் பின்னர் சுருக்கமாய் ஏறு செலவாகி இயன்று முற்செலவாகும். இவ்இயற் செலவால் அரும்பிய 'சுல்'இயல் வளைநெளிவாய் எரி நீர்மையில் வெளிக்கும் ஒளியாய் ஒளிர்வு கொள்ளும். அவ்ஒளிர் வெளிப்பில் ஒளியை இருப்பாகவும் அதில் ஒன்றிய ஒலி இருத்தலாகவும் இயைந்து ஒன்றெனப் பரவுஒள் பரந்தெழும்; பரந்தெழுந்த பரவு ஒள்ளின் பரவிளக்கமே "பராபரம்" என்றும்; ஒளிவெளி என்றும் நாம் எண்ணிக் குறித்ததென்க. இன்னும், பரவுஒள் — பரபொருளாம். பரவுஇயலால் வெளிக்கும் ஒள்ளி — பரப்பொருளாம். வெளிக்கும் ஒளியின் விளக்கம் — ஒளிவெளி என்று நாம் ஓம்புதலாயிற்று. இதனை இன்னொரு வகையாகக் கொள்ளுகையில்; பரவுஒள்ளாம் பரபொருள் — இறு என்றாகவும், பரவுதன்னில் வெளிக்கும் ஒள்ளியல் (வெள்) என்ற பரப்பொருள் - இறை என்றாகவும், இறுதலால் வெளிக்கும் ஒள்ளியல்பு (வேட்சி) என்ற பரம்பொருள் 'இறையோன்' ஆகவும் அமைத்து அறைவர் ஆன்றோர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
- 3 நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில்.

## வெளிப்புஒளி: இறுபொருள்

வெளிப்புடைய ஒளியே வெளிப்புஒளியாம். வெளிப்புஒளியே ஒளிவிளக்கம் என்பது. வெளிபுஒளி – இயல் என்றும், ஒளி விளக்கம்– இயல்பு என்றும் சொல்லலாம். இயல்பு என்பது இயற்கை வடிவம். ஈண்டு ஒளியினது இயற்கையே 'இயல்' என்றும், அவ்ஒளியாம் இயற்கை வடிவுற ஒளிர்தல் 'இயல்பு' என்று நாம் கொள்ளல் வேண்டும். என்ற இயற்கையின் வடிவம் 'ஒளிவெளி' என்றும், 'வெளிஒளி' என்றும் விரிவுறும். ஒளிவெளி–ஒளி இயற்கையின் அகவடிவம், வெளிஒளி அதன் புறவடிவம். எனவே ஒளிவெளியும் வெளிஒளியும் இணைவுற்ற முழுநிலையான ஒன்றே ஒளியினது இயற்கை உருவு என்க. இதனை தத்துவத்தோர் 'பரவெளி' என்றனர். பரவெளியில் ஏறுநிலையான ஒளிவெளி இறுபொருள் என்ப. விளக்கமுறாத வெளியைத் தன்னிலே ஒளி தங்குதலாகக் கொண்டிருத்தலே இறுஎன்பது. வெளிப்பின்மை ஒளி, ஒளி வெளியாம். வெளிப்பின்மையே ஒளியின் அகப்பொருள். அகப்பொருளே–இறு பொருளாய் இயையும். இங்ஙனமே பரவெளியில் இறங்குநிலையான வெளிஒளியே இறைபொருள் என்ப. இறுபொருள் இயல்கை ஆகையில் இறைபொருளாய் இலங்கும். ஒளியின் அன்மை அடங்கியது ஒளிவெளி. அந்த அன்மை அதனுள் அடங்காது – தங்காது தாவி முற்செல்கையில் அந்த செல்புலம் 'புறம்' என்று வெளிப்பு விளங்கல் வெளியாம். வெளிப்புடையது வெளி. இந்தவெளி ஒளிப்புடையதாய் மிகுவிளக்கம் வெளிஒளியாம். இறுபொருளாம் ஒளியானது இருப்பாய் இருந்தது வெளிஒளியாகையில் அஃது இருத்தலாய் அமைகிறது. இவ்வாறு ஒளி இருப்பாயும் இருத்தலாயும் ஒல்கையில் 'ஓல்' என்ற ஒலி அதன்கண் ஒன்றலாகிறது. ஒளியின் ஒள்ளி 'ஓல்' என்று ஒல்கையில் ஒளி இயல்பு ஆகிறது. ஒளி இயல்பில் உள்ள இ – இறு ஆகவாக இயைந்து பொருள் கொள்ளும். அப்பொருள் செயலாக இயல்கையில் இறையாக இசைவுறும். அகர உடனுகை இ(கரம்) என்பது ஐயாகப் பரிணப்படுகையில் ஒளியினது ஒள்வெள்ளியாய் மறுநிலைப்படும் இறையோன் ஐகாரத்தின் கருத்துப் பொருளாகிறது. இனி, இறையேனை இலங்க வைத்த 'ஐ' (அய்) எழுத்தின் தத்துவ விளக்கம் காண்போம்.

## ஒளிவெளிப்பு: இறைபொருள்

ஐ என்ற ஓரெழுத்து ஒருமொழியும், 'இறை' என்ற சொல்லும் தலைவன் என்ற கருத்தே உடையது. தலைமைக்கு ஒருவனுய் தங்குதலிற் தலைப்பட்ட இறுமைப் பரம்பொருளே இறை என்ற அய்யன் அன், இறையனும் ஐயன் என்பதைச் சுட்டும் ஐ (அய்) என்ற உயிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்து எவ்வாறு இயன்றது என்பதைத் தொல்காப்பியம் நன்கு இயம்பியுள்ளது. அஃது "அகரஇகரம் ஐகாரம் ஆகும்" என்பதாம். அகரமும் இகரமும் கூட்டிச் சொல்ல ஐகாரம் போல இசையக்கும். எடுத்துக் காட்டாய் ஐவனம் அஇவனம் அல்லது அய்வனம் எனவரும். தொல்காப்பியர் "ஐகாரம் ஆகும்" என்பதால்; ஐ ஒலிவடிவம் இலக்கணமுடைத்தன்று வரிவடிவமும் எழுத்தப் போலியதாகும் என்ற முறையதாக ஐ என்பதைத் தொல்காப்பியம் விளக்கியுள்ளது. ஐயனும் 'இறை' என்பதை ஐயன் என்று எடுத்துரைக்கும் போது அஃது 'இறையோன்' என்று குறித்துரைத்தலில் இழுக்கன்று. இதில் இயைந்த 'ஒன்' என்பது 'ஒல்' என்பதின் இனத்திரிபாம். ஒல்–ஒன் என்று மாறுகையில் ஓலுறுதல் பொருநெறியாய் உள்ளுற்று ஒலிமைத் தன்மையான பொருள் வடிவத்தைப் பொருந்திடும். அப்பொருபொருளே 'இறையோன்' எனப்பட்டது. ஓ–ஓல் என்று ஓலுறுதலால் ஒலி பெறுதல் – ஒலிதங்குதல் இயைபுறுகையில் அத்தகு இயற்பொருளே இறையோன் எனப்பட்டான். இதில் ஒலியை – 'நாதம்' என்றும்; ஒலியைத் தன்னிற் தாங்கிய ஒளியின் இயற்கைவடிவு கொண்டவன் 'நாதன்' என்றும் தத்துவத்தார் வழுத்தினர். இதுவரையும் ஐ என்ற எழுத்துருவான ஐயன் என்ற பொருளை விளக்கினோம். இனி ஒரெழுத்துத்திறன் நோக்குவாம்.

ஐ என்பது போலி எழுத்தென்றால் அதன் உண்மை எழுத்து எது? என்று நோக்கல் நம்கடன். ஐ என்று ஒலி முறையாக உரைக்கையில் 'அய்' என்ற அகரம் ஒன்றிய 'ய'கர வரிவடிம் நமக்குப் புலப்படுகிறது. இந்த யகரவரிவம் ஐகார வரிவடிவத்தில் வைத்து ஆய்கையில் நெளிவளைவாகவும் நெளிவற்ற வளைவாகவும் மயங்கிய வரிவரைவுடையது. யகரவரிவான தெளிவரைவு ஐகாரத்தின் மேற் பகுதியிலும், அந்த நெளிவரைவே தொடர்முறையாய் கீழ்ப்பாகத்தில் மூன்று குத்துக் கோடாய்ப் பரிணப்பட்ட வகையில் தாங்கும்முறை போலியாகப் பொருந்தும் வகைத்தாயிற்று. ஐகாரத்தின் மேற்கூற்றின் புள்ளி – சிறுசுழியாய், உள்வளைவாக மடங்கி இறங்குதல் விந்து என்ற தத்துவத்திற்கே உரியது. அவ்விந்தே நாதமாய்ப் பரிணப்படும் என்ற தத்துவமுறை விளக்கத்தை அறிவுறுத்தல்போல அந்தநுண் யகரவடிவு பருநெறியிற் குத்துக்கோடாய்ப் பிளைவுற அமைதலாயிற்று. அந்த ஐகாரக் கீழ்க்கூறு யகரமாகப் பருப்பட வைத்த மூன்றுகோடும் இரண்டு இடைவெளியை இயைத்து இலங்குகையில் பரவெளிஇயலை நமக்குக் காட்டுவதாகும். நாம் யகரம் எழுதுங்கால் முன்வரும் இடைவெளி, பரவொளியின் ஏறுமுறையில் ஒளிவெளியாம் இறுவெளி கொண்டது. பின்வரும் இடைவெளி இறங்குமுறையாய் வெளிஒளியாம் இறைஒளி கொண்டது. இனி; 'அய்' என்பதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகரம் ஒன்றிய யகர எழுத்தென விளங்க, அவ் யகரஎழுத்தும் ஐ என்ற எழுத்துப் போலியிற் பொருந்திய மறை எழுத்து என்றே ஆழ்ந்த உணர்வோர் ஓம்புவர். அஃது ஐ வடிவில் நுண்மையாகவும் பருமை யாகவும் அம்மறையியல் வரைபட்டிருப்பதையும் காட்சி முறையிற் காண்பவர் கண்ணுடையர். இத்தகு யகர வரிவடிவம் உயிர் பொருந்தும் பருவுடல் வடிவத்தை நுண்முறையாகக் காட்டுவதொன்றுகும். மூன்று குத்துக்கோடும் அவற்றின் பிணைப்பும் அவ்வுடலில் மூன்று நாடிகள் பிணைப்புற்ற இயலைத் தெரிவித்தலால் அந்த நாடி நரம்புகளால் யாத்தல் உற்ற யாக்கையினது உயிரே ஆன்மா என்று அறையப்பட்டது. இந்த ஆன்மாவை ஐந்தெழுத்தில் அமைக்கையில் யகர எழுத்தாகவே சிவ ஞானத்தவர் தேர்ந்தனர். யகரவடிவான அவ்ஆன்ம யாக்கையில் அவ் ஆன்மா அமையத் தங்குதலால் சீவான்மா என்று சிறப்புப் பெற்றது. இச்சீவான்மாவைக் காட்டுவது ஐகார எழுத்தின் கீழ்பாற்கூறு. கீழ்பால் கூறு சீவான்மாவாகப் பருப்படக் கொளவைத்தலால் அதன் மேற் பால் கூறு சிவ ஆன்மாவை நுண்மையாகப் பெறவைத்தாகும். சிவ ஆன்மா என்ற சிவனுனவன் சீவான்மா என்றிடும் உயிர்க்கு உயிராக உற்று இருத்தலால் இதனை விளக்கும் முகமாகவே ஐயினது மேல்பாகமான விந்து தொடர்வியலாய்க் கீழ்ப்பாகம் நாதமாகப் பரிணப்பட்டதென்று நாம் விளக்கியதாம். இவ்வாறு ஐ என்ற எழுத்தில் உள்ளுற்ற அகரம் இறுபொருள். இகரம் – இறைபொருள். இவற்றின் கூட்டுப் பொருளிலே ஐயன் இயன்று. இறையோனுகை இயல்பு உற்றுன் என்று தெளிதலே முறையானது. நிற்க; ஐயின் மேல் வரிவடிவம் முழுவிந்து வடிவம். இஃது 'அ' ஆகும். கீழ்வரிவடிவம் விந்து நாதத்தில் மருவியும் மயங்கி யும் ஆனதோர் இயல்பை உணர்த்துவது. விந்துவும் நாதமும் மருவ லால் அகரம் ஆயிற்று. அவை மயங்கலால் ஓகாரம் எழுந்தது. அகரம் ஒளியாயும் ஓகாரம் வெளியொளியாயும் நேர்தலின் ஒளிவெளியையும் வெளிஒளியையும் உணரலாம். இன்னும் 'ஐ' யின் கீழ்வடிவம் விந்து மருவி மயங்கிய நாதப் பெற்றியதாதலின் அபர விந்துவாம். இதுவே சிவதத்துவமாகும். 'ஐ'யின் மேல்வடிவம் கலப்பற்ற விந்து ஆதலின் சுத்தவிந்தாம். சுத்தவிந்து சுத்த சிவமென்கையில் ஒளியாயும், சுத்த வெளிச் சிவமாகையில் ஒளிவெளியாயும் நிலைக்கும், ஒளி–அரனென்றும், ஒளிவெளி–அரகர என்றும் கருதப்படும். ஐ'யின் கீழ்வரிவடிவில் மூன்று கோடிட்ட பாகுபாடு அரகர என்பதை நினைவூட்டி வெளிஒளியை விளங்கச் செய்யும். வெளிஒளி யகரக் குறி போன்று விளங்குதலில் அந்த யகரத்தில் மகர வரிவடிவமும் மறைந்திருக்கிறதும் தெளிதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். மறைமகரம் சலமகளாம் நடப்பாற்றல் என்ப. வெளிக்குள் மறைந்த ஒளியே வெளிக்குரிய ஒளியாதலின் அவ்ஒளி ஆதிசத்தியாம். அச்சத்தியின் ஆற்றல் அவ்வெளிப்பில் பொருந்தலால் அம் மகரம் 'ம்' என்று மாயை வெளியாயும் 'அ' - மாயோனுகவும் அமையும் என்க.

## வெளிஒளி — பராபரை

நமது கருத்துக்கும் காட்சிக்கும் அமையாது மிகமிகச் சேண்மைத் தாய்ச் சார்ந்த வெள்பரவு உண்டு. அந்தப் பரவிலே மேலும்கீழும் ஒள்அண்ணு ஒளியாய் உண்டு. அந்தப் பரவும் ஒள்அண்ணுத்திரளும் ஒன்றலாய் ஒள்ளின் அணுகையில் அப்பரவு என்பது அந்த ஒளித்திரளில் இருந்து பொருவு இயலான பொருண்மை யாகிறது. இப்பொருண்மை "பலம்" என்று சொல்லப்படும். பலம் என்ற பொருண்மை மிகமிகச் சேண்மைத் தாதலின் சேண்சுட்டும் அகரத்தால் அ + பலம் = அம்பலம் என்று அதனை நிலைப்படுத்தினர். அம்பலத்தில் ஒட்டுதலில்லாது அமைந்த ஒளித்திரட்சியே ஒளிவெளியாம். இந்த ஒளிவெளியின் நிழல் போன்று விளங்கிய ஒளியானது ஒளிரும் பொழுதில் மேல் வெளியும், கீழ் வெளியும் என வெளித்திரட்சியை விளைவிக்கும். இதனையே வெளி ஒளி என்றேம். இது பரவெளி உச்சியின் கீழ்பால் கிளர்ந்த ஒளித் திறனும். இந்த ஒளித்திறனே பரத்தின் பொருளாகையில் அஃது அம் பரம் என்று அழைக்கப்பட்டது. அம்பலத்துக்கும் அம்பரத்துக்கும் இயைபு இல்லை. அம்பலத்தில் தனியான ஒளிவெளி என்ற ஒன்று, ஒன்றுபோலத் தோன்றும் வெளிஒளியாம் அந்த அம்பரத்தில் வேர் கொளச் செய்தது. இதுவும் சார்பில்லாததொன்றுகும். எனினும் இதனைப் பொருள் என்று போற்றி இதயத்திற் கொள்வர். அம் பலத்திற்றுன் அம்பரமானது பொருந்தும் முறை பொருளற்ற அம்பலம் பொருளுற்ற அம்பலமாக மிகுதலாம். அந்த மிகுநிலைப் பொருளான வெளியொளிப் பெயரே "அம்பரம்" என்க. விஞ்ஞானியர் அம்பரத்தை "ஈதர்" என்பர். ஈதர் என்ற வெளிப்பரப்பு அசைவில்லாமல் பிரபஞ்சம் முழுவதையும் பரந்து நிறைந்து இருக்கலாமென்று நம்பிக்கை யில்லாமல் விஞ்ஞானியர் உரைத்துள்ளனர். ஏனெனில் பரிசோதனைக் களத்தில் அவர்கள் பலப்பல சோதனைகள் செய்தும் உள்மை உருப்படாமை என்க. எங்கள் ஞானியர் வித்தையாம் உணர்வுக்களத்தில் உற்று பலப்பல ஞானக்காட்சிப் பேற்றல் வெளிப்பரப்பை அம்பரம் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிந்ததே. அந்தப்பரப்பு ஒளியைக் காட்சியாய், கருத்துப் பொருளாய் அவர்கள் பெற்றதை அறிவுறுத்துவதாகும்.

ஒளிவேகமே ஒரு தனி எண். அதுசார்பிலாதது. யாவருக்கும் ஒன்று போல் தோன்றுவது, ஒளிவீசும் சாதனத்தால் சிறிதும் பாதிக்கப்படாதது என்று ஐன்ஸ்டைன் விசேஷ சார்பு நிலைக்கொள்கையில் கூறியுள்ளார். எனவே ஒளிவெளி வேகமே வெளியொளியைப் பிறப்பித்தது. வெளியொளிவேகமே பரபிந்தைப் பிறப்பித்ததுவாகும். பரபிந்தின் மூலவியல் ஏறு-இறங்குமுறையாய் முழுமைகொள் பரவெளியென்றிடும் பரவிந்தும் 'ஐ' என்ற வடிவமுறையில் வெளி விளக்கமாகும். அதாவது ஒளிவெளியென்ற அ-காயமே வெளியொளியென்று ஆ-காயம் என இயல்பில் மிகுந்தது. இந்த மிகுவெளி 'உல்' என்ற எரிதற் பொருண்மையது. அஃது உள்ளொடுங்கல் நெறிகையால் தன்னுள் ஒடுங்கிய வெள்மைப் பொருண்மைகளை வளைதல் முறையாக விரிக்கையில் அது வெளியொளியாய்ப் 'பரவு' ஆயிற்று. பரவு என்பதிலுள்ள பர- என்பது 'வு' என்ற வரிவடிவாய்ப் பாத்தல் விளைத்ததால் பரவு என்றோம். இந்நிகழ்வு பராபரம் என்ற ஒளிவெளி எல்லையிலே இயல்வது என்று எண்ணல் வேண்டும். இங்கு'வெள்மை' பருமையாகவும், "ஒள்மை" நுண்மையாகவும் அமையும். இத்தகுவான வெளியொளி அம்பரம் என்று அறையப்பட்டது. இஃது தூய 'அர' வெளியாம். ஐன்ஸ்டைன் ''ஈதர்'' (ஆகாயம்) என்ற ஒன்று இருக்கலாம்; அன்றி இல்லாமலும் இருக்கலாம். எனக்கு அதனைப் பற்றிச் சிறிது கூட அக்கறையில்லை" என்று கூறியதால் வெளிஒளி என்பதற்குள் ஒளித்திறனையே பரிசோதனைக் களமாக்கினர் என்பது புலனாகின்றது. ஆனால் எங்கள் ஞானியர் உடலாம் வெளியின் ஆறுநிலை ஆதாரங்களில் உயிராற்றலான அறிவாம் ஒளியைப் பொருத்தி வெளியொளியாய்த் தன்மயம் ஆக்கியதோடு சேண்மைத்தாய்த் தழுவும் புறவொளிவெளியையும் தம்முணர்வு மூலமாய்த் தன்மயமாக்கிக் கொண்டார்கள். இதனால் நமது தத்துவமும் மந்திரமும் தழுவிய சில எழுத்தும் சில சொல்லும் ஒளிக்கும் வெளிக்கும் பொதுவாக உள்ளன. நம்ஞானியர் ஐன்ஸ்டைன் ஈதராம் ஆகாயத்தைப் புறக்கணித்தல் போலப் புறக்கணிக்காது உடல் உலகமாய வெளிப் பொருள்களைத் துணைப் பொருளாக்கி ஒளியாம் பொருளையும் ஆய்வு செய்தனர். இதனால் நம்மவர் கண்டகருத்துப்பொருளை விஞ்ஞானியர் கருமப்பொருள் முறையில் காணுதல் கானல்நீரிலே நீரைக்காண்பதாகும். நிற்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிப்பொருள் – முதற்பொருள் அல்லது மூலமாகும். ஒளிவெளிப் பொருள் – முதல்நிலைப்பொருள் அல்லது மூலப்பொருள் என்ப. வெளியொளிப் பொருள் முதல்மிகுநிலைப்பொருள் அல்லது மூலம்மிகுபொருள். இவ்வளவும் பராபரம் பொருந்திய பகுதியாம். இதில் பராபரை என்ற கூறு வெளிஒளி என்ற மூலம் மிகு பொருட்பகுதியாம். 'பர' என்பதிலுள்ள 'அ'கர ஈருன மீநுண்பொருள் பகாரத்தின் செயல்படும் பொருளாக மிகுகையில் பர–பரை என்று ஐ யீறு இறுதற் பெற்றியதாயிற்று. இறுதல்= அழிதல். பரத்தலான பொருண்மையைப் பர என்பது தாங்கலாகையில் பரையாகும். இந்தப் பரையானது அழிதல் முறைக்கு நெறியாகும். இது பரபொருளின் பண்பும் பண்பாடும் குறித்தவாரும். வெளியொளியில் வெளிமை மிகுந்து ஒளிமை மிகாத பெற்றி இயலுகையில் டகரப்பொருள் பரையாயிற்று. பர என்பதற்கு பரையே ஒத்த ஒப்புநிலை. பர பொருளைத் தன்னுள் உள்பொருளாக உளப்படுத்திப் பரப்பொருளாக விளங்குகையில் பரையென்பதைப் "பராபரை" என்றனர் ஆன்ரோர்.

பர= சத்து எனின் பரை= சத்தி என்ப. சத்து என்பதன் உகர ஈறு விந்தென்க. விந்து = ஒளி. சத்தி என்பதன் இகர ஈறு விந்துவின் இயக்கத்திறனின் குறி எழுத்து. பர என்ற விந்து பொருளானல் அஃது 'ஆ' என்ப. விந்து என்ற பொருள் இயக்கப்பொருளானல் அஃது இ என்ப. இ–யின் வரிஇயல்கை போல அகரம் இயங்கும் வடிவமானல், இ–இம் (ம்) என்று வெளிஒளியினது மாயா வெளியை அமைத்திடும். இவ்வாறு மாயா தத்துவ வெளி, வெளி ஒளியிற் கர (கருமை) வெளிப் பகுதியிற் கால் கொள்ளும் என்க. அத்துடன் சத்து என்பதன் உகர ஈறு உடமையால் விந்து என்ற ஒளி (சத்) அதனில் உண்டு. இந்த சத் என்பது எது? அதுவே அரனுக்குரிய மந்திரத்தில் விந்துவை மருவிய நாதமாம் அகரத்துடன் கூடிய "ச" என்க. இந்த "ச" என்பதே சத் என்ற உள்பொருளாகும். இந்த உள்பொருளில் விந்துவாம் உகரம் இணைகையில் சத்து சான்றது. எனவே சத்தானது 'அர்' என்பதற்கு நேராதலின் வெளியொளியில் மிகாத ஒள்மையே 'அர' என்று அமையும். 'அர' ஒள்மையும். 'கர' ஒல்மையும் கலந்து மயங்கி வெளியொளியே அரகர என்று அறையப்பட்டது. அறையப்பட்ட அரகர கலந்த மயக்க வெளி ஒளியினது புறஎல்லை வட்டமே அரகர என்ற அகார வெளி, அந்தப்புற எல்லையின் உள்வட்டம் அரிகரி என்ற இகர இயல்வெளி. இந்த இகர இயல்வெளியின் எல்லை வட்டத்தின் உள்வெளி'சி' என்ற அசபை வெளியாம். 'சி' வெளிப்பொருள். அப்பொருளின் அகம் – அ குறியானது. புறம்–இ குறியானது. இவை விரிசையில் 'இ' என்ற குறி'சி' யின் இயக்க வெளியாயும் 'அ' என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில்.

குறி அவ் இயக்கத்தின் வடிவவெளியாயும் நாம் தெளிதல் வேண்டும். இவ்வாறு பராபரை வெளியாம் வெளியொளித்திறனை மேலும் தெளிக. மேலான பரமும்பரையும் ஆகியவை கலந்த மயக்கமான பராபர வெளியை நாம் சிவஒளி – அருட்சத்திஒளி – ஆன்மஒளி என்றஒளிவகைகளுக்கு மூலவள வெளிப்பாக நாம் விளங்கல் நலம்.

## 2. வெளி—பரவெளி

### வெளி இயக்கம்:

வெளியென்ருல் பரவெளியையே குறிக்கும், பராபரையாம் வெளியொளியைக் குறிக்காதோ எனின்? குறிக்காதென்க. பராபர ஒளியின் இயக்கவொளியே பராபரை யென்னும் வெளியொளி என்றலின் இஃது அதன் இறுஒளியாம் ஆதலின் இணைத்தற்திறன் தொடர்பு இல்லை. இந்த உண்மை.

> "ஆதாரத்தாலே நிராதாரத் தேசென்று
> மீதானத் தேசெல்க உந்தீபற
> விமலற் கிடம்அதென்றே உந்தீபற"

என்ற திருவுந்தியார் நூலால் பெறப்படும். ஆதாரம்–வெளிஒளி; நிராதரம் – பரவெளி; மீதானம் - பரவெளியின் உச்சிவெளி. இங்கேயே சுத்தசிவமாகும் தத்துவப்படாத - காரணப்படாத சதாசிவம் இருப்பதென்று அப்பாடல் அறிவிக்கின்றது. பரவெளி நிராதரவெளி. அதன் உச்சி வெளியிற்ருன் சுத்தசிவமாம் சதாசிவம் சால்புறுவது என்று உச்சிவெளியையும் உடன்பட்டுரைத்தது, பராபரஒளிவெளியின் எல்லை வேகத்தின் விசைவிளைவு பலப்படுத்தவே, அவ்விளைவு பரவெளியை நிராகாரம் ஆக்கியதோடு ஆங்கே பாழ்வெளியையும் அமைத்து விளக்கம் பெறக்கூடிய 'பிந்து' என்ற அரும்பொருளையுமிட்டு ஒரு பொருந்துதல் முறையை ஆக்கியதுமாம்.

பராபர ஒளிவெளி எல்லைவேகத்தில் ஏற்பட்ட துளியான ஒள் நிராதாரவெளியில் 'நில்' என்ற தானத்தில் இருத்தலாகும் ஆற்றல் பெறுகிறது. தகர ஒகரமாம் 'தொம்' என்ற ஒல்லின் அசைதலுக்குத் தலைத்தோற்றமாகித் தான்பரந்து பற்றும்அகல்வு பரதானம் என்றும், தானும் பரபிந்துஎன்றும்ஏத்தலுக்குஅஃது உரியதாயிற்று, பரதானமேபரவெளி என்று பெயர் பெற்றது. தானம் வெளியாகத் தலைப்பட்டுப் பெயர்ந்து பரந்தமையால் அப்பெயர்வு அமைவுக்கேற்பப் பரவெளிப்பெயராயிற்று. 'பர' என்பது மேல்என்ற கருத்தால் 'பரஒள்' பற்றிய நிராதாரவெளியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ-காயம் என்றும், பூமண்டலவெளி ஆ-காயம் என்றும் நேரலா யிற்று. பிரகிருதிவெளி அவ்அண்டவெளியிற் அமைதலால் அகரஉரு வான பரபதி ஆங்கு அமைவுறலாகும். எனவே அஃது அ-காயம் என்பது அகாயம் என்று விட்டிசையாத பௌதிகப் பொருட்பகுதி யாயிற்று. ஆ-பசு, பசுத்துவமான சீவஉயிர்கள் காயமாம் உடலை யுறுவதற்கு உரியவெளியாகச் அப்பகுதி மேலும் சிறத்தலின் ஆகாயம் என்ப. இதனைப் பரவெளியில் வைத்து நேர்கையில் காரியநிலை வெளியாகிய இறங்குநிலை வெளியே இதற்கு உரியது. எனவே இறங்குநிலையின் முன்பகுதி அ-காயம், பின்பகுதி ஆ-காயம். ஈசன் அதிகாரமூர்த்தமாய் நின்று அப்பின்பகுதிலே சிவன் முறையிலும், சீவன்முறையிலும் அரன் அரி அயன் என்று விளக்கமாகித் தொழிற்பாடுகளைத் தோற்றுவிப்பர். ஒளிவிளக்கத் தில் அபர-கூறுமானஇயக்கமுன் சிவ என்று பேசும் எழுத்தாக ஈரெழுத்தமையும். பின் கூறிலே முன் கூற்றின் திருப்பு வெளியாம் அவ்இறங்கு மையவெளியின் குறியாக அச் சிவ என்பது வசி(ய) என்று நிலைமாறி அதன் வெளிக் கீழ்நிலைப் பரவு அத்தன்-அன்னை- ஆருயிர் என்று சி - வ - ய என்ற நிலைப்படும் என்ப. இன்னும் வெளியில் ஒலிப்பெயரான 'ஒல்' என்பது பொருந்தலால் 'சி' யொலி பேசா ஒலியாதலின் 'செம்' என்று நிலையாக நிற்கும் செவ்வொளி யின்ஒலி என்றே கருதுதல் வேண்டும். அச்செவ்வொளி 'சி' இன் பொருட்டினிவைச் சுட்டும் குறியெழுத்தாவது 'வ' கரம் என்ப. இச்செவ்வொளி 'சி' யின் அகத்துள் அமைந்த வகரப் பொருட் டினிவைக் காட்டிலும், 'சிவ' என்று இயங்கும் சியோனின் செவ் வொளி, புறத்தயலில் புல்லிடும் 'சிவ' என்பதன் வகரப் பொருட் டிணிவு அதிகமாகும் என்பது விஞ்ஞானம் கூறும் விளக்கமாம். இவ்விளக்கத்தை நம் சிவஞானியரும் ஒம்புவர். இதற்குக் காரணம் 'வ' என்ற பொருட்டிணிவு 'சி' யினது பொருளாய்ப் பொருந்த லால் என்க. இப்பொருந்தலே இறைவனின் எண்குணங்களில் ஒன்று நிறைவுடைமை என்று பேசப்பட்டது. பரநிலைவெளியும் அவ் வாருன நிறைவுடைமை உளதாகவும் கொள்ளப்பட்டதென்க.

## வெளிஇயக்க வடிவம்:

பரவெளி உச்சியில் கடவுளான ஒளிஇயவுள் வடிவம் வெளி வடிவில் உருவமாகின்ற பொழுது அகர உருவான "சி" என்பர். இந்தச் 'சி' மேலிருந்து கீழ்வரையும் கிளர்தலாகி நிறைவுறுகையில் அவ் (வ) என்றும் அம் (ம) என்றும் இடை- கடை என்று முறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில்.



யுற அமர்வுறும். இவ்வாறு சி ஆனது அமர்வுறுகையில் 'சிவ'-சிவம் என்று செவ்வையாகும். மேலும் சிவம் என்ற பரம்பொருள் ஒளியைச் சிவப்பரம் (அ) என்றும், வெளியை பரசிவம் (சம்) என்றும் பொருளாக்கும். சம் என்ற பொருள் அம்பரம் என்று பெயர் பெறும். அ-பரபொருள் அம்பரப் பொருளாதல் பரிணாம். அஃது அசம் ஆதல் பரிணமம் என்று கொள்க. பரிணம் என்ற சொல்லில் 'நம்' என்பது வளைதல் கருத்தாதலால் 'அம்' என்பதிலுள்ள 'அவ்வு' "ம்" (இம்) என்பதைச் சூழ்ந்து வளைதலாகையில் சுழியாம் விந்து என்ற ஒளியும், குத்துக்கோடாம் வெளியும் கரத்தலாகவே அவ்வு (ச) சவ்வாகப் பரிணப்படும்போது 'சம்' என்று வளைதற் பொருளாக வகைப்பட்டது. கரத்தலான அகரம் அரத்தலாக மேலும் மிகவே சம்- "அசம்" என்று மிகுந்த நிறைவு பெற்றது. அகர உருவின் முதல் (சிறுசுழி) கடை (குத்துக்கோடு) யும் கரந்தலாகவே இடைப்பகுதி அரத்ததாக -சிவத்ததாக அமைதலால் அச்'சகரம்' மெய்யோ உயிர்மெய்யோ என்பது யாரும் அறியாப் பெற்றிதாயிற்று இதனால் அ- ச அநாதி என்றனர். சவ்வு (இ) 'ச்' என்று மெய்யாகையில் 'இ' என்ற உயிர் கரத்தலாயிற்று. இது மாயோன் திறனாகும். கரத்தலான 'இ' உயிர்; 'ச' மெய்யியல் அரத்தலானதும் 'சி' என்று பேசா எழுத்தாய் மீகரத்தலாயிற்று. இது சேயோன் திறனும் இவ்வாற மயோனாகவும் சேயோனாகவும் பெறும் பெற்றியையே திருமூலர்.

> அவ்வுண்டு சவ்வுண்டு அனைத்துமங் குள்ளது
> கவ்வுண்டு நிற்கும் கருத்தறி வாரில்லை
> கவ்வுண்டு நிற்கும் கருத்தறி வாளர்க்கு
> சவ்வுண்ட சத்தி சதாசிவன் தானே.

பொது சன நூலகம்
நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில்.

என்று திருமந்திரமாகப் புகன்றுள்ளது இஃது வெளியின் நுண்மை விளக்கம். கவ்வு-கரத்தல். இந்தக் கரத்தல் மீகரத்தலாய் மேன்மைப்படுதலை இத்திருமந்திரம் நன்கு வற்புறுத்தியுள்ளது. சவ்வுண்ட சத்தி -வ. இதனை வசி என்று வகுப்பர். வசி = சதாசிவம்; தத்துவம் பெருத சுத்த சதாசிவம். சிவ் என்பதை அவ்வு (அ) என் நேர்பொருந்த சிவ ஆகும். 'ம்' என்ற எதிர்நேர் பொருந்த (சிவ்+அம்) சிவம் ஆக அமைவுறும். அ-நேர் என்றது அர் என்ற ஒளிமையாம். ம் (இம்) என்ற எதிர்நேர் இவ்வு (இ) இருள்சுட்டும். இருள் 'இ' விளக்கமாக அர்-அரி என்ற மாயோன் ர்-கரி என்று மாயையோன் ஆகவும் அமையும். அர் என்பது மீவெளியில் அகரத்தின் ஆற்றலால் அர என்றும்; கரந்த அகரத்தின் ஆற்றலால் கர்-கர என்றும் அந்தவெளியில் ஆக்கமாமாகும். இதனையும் திருமூலர் பெருமான்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமர்ந்த அரகர வாம்புற வட்டம்
அமர்ந்த அரிகரி யாமதன் உள்வட்டம்
அமர்ந்த அசபை யாமதன் உள்வட்டம்
'அமர்ந்த ரேகையும் ஆகின்ற சூலமே.

என்று ரேகையும் எழுத்துமாகிப் பின்னி வெளியியக்க அமைப்பின் இயவுள் வடிவத்தைப் பருமையாக அருளியுள்ளார். 'சி' வெளியாம் அம்பரம் படிப்படியாக வளர்வுற்று இறுநிலையில் வகர அம்பலமாகக் காட்டியதிறன் என்னே! சிகாரம் இயவுளவாகி வகரத்துள்ளே கடவுளா ராகப் பொருட்டிணிவு கொண்டதிறத்தையும் ஈண்டு சிந்திக்கலாம்.

ஒளிவெளி – இயக்குவெளியாதலில் வெளியொளி – இயங்கும் வெளி யாகின்றது. இயக்கல் = இயங்கச் செய்தல்; இயங்கல் – தொழில் பெறச் செய்தல் இம்முறையில் இவை இருக்கும் வெளி இருத்தல் வெளி என்று இருமை இயைபு ஒருமையாகப் பெறும். இந்த இயைபானது ஒளி – வெளி என்பவைகளை எவ்வாறு எடைபோடுவதென்று அறிந்து கொள் வதைப் புலப்படுத்தும். இந்தப் புலப்பாட்டில் வெளி அகநிறைவாயும் ஒளிபுற நிறைவாயும் முதற்கண் இயக்கவடிவு கொள்ளும். இவ்வடிவு ஒளி-வெளிகளை வைத்து நாம் நேர்ப்படுத்துங்கால் "ஒளி (வெளி - வெளி) ஒளி" இந்த நேர்ப்பாட்டில் அடைப்புக்குள் உள்ள வெளிகளில் முதலில் உள்ள வெளி – காரணம் என்று அமையும். பின்வரும் வெளி காரியம் இவ்வெளிகள் பொருந்தலாய்க் கலந்து மயங்குதலில் இருப்பு 'நில்' உறு கிறதே யொழிய நிலையுறுதல் இல்லை. எனவே இருப்பின் நிறைவு குறைவாகவும், இருத்தலின் நிறைவு முழுமையாகவும் உள்ளன என்று தெளிதல் வேண்டும். நிறைவு = பொருட்டிணிவு. இதனால் இருத்தல் – இருப்பு என்றவற்றின் வெளியானது வலிமைப்பட்டாது, ஒளிவலிமைப் பட்டதாம். இதுவே ஒளிவெளியின் தன்மைவடிவம். இதுவே பரவெளி யின் ஏறுநிலைவெளி விளக்கமாகும். இதிலும் அடைப்பின் முன்னுள்ள புறத்துஒளி பராபரம்; பின்னுள்ள புறத்துஒளி பரவெளியின் உச்சிப் பகுதியின் பராபரை. அடைப்பின் முன்வெளி – பரபிந்துவெளி; பின் வெளி –பரவிந்துவெளி என்றே விளங்குவதாகும். பின்னுள்ள பரவிந்து வெளியே பரஉச்சியித் பரநாதஒளியாய் –ஒளிவெளியாகிப் பின்பு உச்சி யிருப்பின் நுண்மையால் அதுகீழ்நோக்கி இறங்குகையில் வெளியொ யாகப் பரிணமித்தலாயிற்று. இது வெளியொளியாகப் பரிணமித்தலா னதும் இது "வெளி (ஒளி –ஒளி) வெளி" என்றே நேர்படும். இதுவும் முந்திய விளக்கம்போல் முன்புறத்துவெளி இறங்குபரவெளிக்கு மூலம் என்ற வேர் வளியாம். அடிநிலைவெளியான பின்புறத்துவெளி இறங்கு பரவெளிக் கீழ்முகத்திற்கு முடிவு வெளியாயும், அதற்கு அப்பாற் பட்ட வெளிக்குத் தொடக்கமாயும் அமையும். அடைப்பில் உள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூ...
நல்லூர் பிரதேச சபை
கொக்குவில்.



ஒளிகள் இறங்குவெளிப் பரப்பில் முன் வெளிப் பகுதிக்கு உரிய ஒளியாகும். இது நாதம் (சி) விந்து (வ) என்று 'அர' ஆக வகைப் படும். பின் ஒளி இறங்குமையத்தின் கீழ்பால் வெளியின் ஒளியாம். இவ்வெளியானது நடுமையில் 'வசி' என்ற காரிய சதாசிவமாகும். பின்னர் மகேசுவரன் என்ற சிவமும். சுத்தவித்தையென்ற சத்தியும் பெற அமைந்துள்ளது. இங்கு மையவெளியின் இயக்கவடிவம் காட்டவில்லை. காரணம் 'ய' என்றகுறி ஒளியானது வேற்றொளியாய்ப் பொருந்தலால் விடப்பட்டது. நாம் யகரமும் கொண்டு வசியை நேர்ப்படுத்துகையில் வ(சிய-யசி)வ என்று முறை வகைப்படும். முன்வரும் வசிய இறங்குநிலைப்பரவெளிக்கு அர என்று உட்ப்பட்டது. இஃது ஒளியுடையது. யசிவ அவ்வெளிக்குக் கர என்று உட்ப்பட்டது. இஃது இருள் உடையது. எனவே ய என்ற இருளொளியாயிற்று. வகாரம் புறத்து முழுமையானதால் பராசத்தியாம்வெளி. இது தூயமீஅரவெளி. இது தான் அருள்வெளி என்றும் சுட்டப்பட்டது. அடைப்பில் முன்வரும் சிய-அரகர, பின்வரும் யசி-கரஅர ஆகும். அரகர ஒளிநிலை நிறை வெளிப்பாம். கரஅர இருள்நிலை குறை வெளிப்பாம். இவ்வாறு வெளி இயக்க அமைப்பு கீழ்வடிவினைத்தேர்க.

# 3. பரநிலைவெளி

## வெளிப் பொருள்: அருவம்

பரம் நிலைகொண்டவெளி பரநிலைவெளியாம். எல்லா வெளிப் பகுதிகளுக்கும் அந்நிலைப்பாடு பொதுவான நடுவுஇல்லமாகப், பொருந்துதலில் அஃது நிலைவெளி எனப்பட்டது. அந்நிலைப்பாட்டில் அமைந்த பரப்பொருண்மை செயல்படும் பொருளாய்த் தலைமைத்தானம் தாங்குதலால் அது பொருளாயிற்று. பரம்-பர என்று "ம்" (இம்) தொக்கு நின்றதற்கும் ஒருகத்துவம் உண்டு. அஃது யாதெனில் "ம" என்ற நடப்பு (கிரியை) ஆற்றல் 'ம்' (மாயை) என்றவிளக்கம் பெறுது மேலான தூய 'அர்மை' யினது விளக்கமே 'அ' என்று ஈருக அமைவதற்காயிற்று என்பது. 'அ' என்ற குறியுற்ற பிந்து அந்த அகத்தை வளர்வுறுத்துகையில் பரிணவிந்தாய்ச் (பர நாதம்) சிறந்து அகத்தின் புறத்தைப் பொருந்துகையில் மேல்கீழ்ச் செலவால் முறையே அம் என்று 'ம' மகிழ்தலாகும் பரநாதஇயவுவெளியாம். மகரம் தவிர்ந்த அகரத்தின் பகுதி பரபிந்து ஒளி பரநாதமாய்ப் பரிணப்பட்ட பரபிந்து இயவுள் ஒளிவெளியாம். பரைபிந்து ஒளி வெளியும் பரநாதவெளியும் கலந்து மயங்குகையிலே பரநிலைவெளியின் முன்பக்கம் விளங்கும் வெளிப்பாகும் என்று அந்த அகத்தின் விளக்கம் கொள்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிந்து என்ற 'ஒள்' உள்ளொடுங்கல் மூலம் தன்னில் உள்ள வெள் இயல்பை முன்மை என்ற கருமத்தால் உவ் என்று 'வு' அவ்வுருவாய் "வெள்ளு" என்றே இயலும். இயன்ற அவ்வெள்ளு 'இ' கர இயலாய்ச் சுழன்று செல்லும். அச்செலவு 'பர்' என்ற ஒலிமை குறிப்புடையது பர் ஒலிமையே பண் என்று பட்டது. வெள்ளுவின் சுழற்செலவு வடிவம் 'ப' போன்றதென்க. வெள்ளுவின் 'ப' வடிவச்சுழல் வடிவிற் பிறந்த ஒல்மையே அர் இயவு இசைதலாகும். இயவு மிகமிக அவ் இசைவும் மிகும். இந்த மிகு இசைவே பருப்பம் பெற்றலின் அதனைப் 'பண்' என்றனர். அர் இயவு இயைவால் இசைமை இணதலின் இணை தல் இசையையே 'பண்' என்று இயலாயிற்று. அர் இயைவில் உண்டான இசைவு பண்ணு – பண்ணல் எனப்படும் என்க. நிற்க; அந்த அர் ஒல்மை வெள்ளுவின் 'ப' உருவிற் பற்றிப் பதிகையில் அர் – "ர" என்றே ஒன்றிப் பதியுமாதலின் அப்பதிவு 'பர' என்று அமைந்திட்டது. பவ்வின் அகர ஆற்றலால் அர் – அர ஆயிற்று. இதனை "பர்" என்ற விந்தில் "அர்" என்ற ஒல்மம ஒலி மருவவே 'அ' உளப்படும். உள்பட்ட அ என்பதைப் பர் என்ற விந்து உடமையாக்கியதால் "பர" என்று இயவுள் நேர்தலாயிற்று. பர இயவுளே கடவுள் பொருளாயிற்று. எவ் வாறெனில்; வெள்ளு விரிந்தும் குவிந்தும் விரிந்தும் இயவுகையில் அவ் வெள்ளு அகல்வுற்ற பரவு எல்லையில் இறுவானதும், வெள்ஒள் அகத்துள் ஒன்றிய ஒல்மையானது ஒலிமையாய் வெள்ளொள் புறத்துப் பொருந்தி அவ்வெள்ளொள்ளினைத் தன்னகத்துப் பொருளாய் அடங்க மிகுந்தது. இந்த மிகுநிலைப்பிந்தே விந்தென மேம்பட்டுப் பரவெளி ஏறு எல்லையை மீறியே வீறுவிசையில் அதன் உச்சிமேல் உதித்தது. இந்த உச்சியை "நாதாந்தவுச்சி" என்ப நாத எல்லையிற் பரபொருள்; எல்லை உச்சியில் பரப்பொருளாம். 'இ'கர இயலாய்ச் சுழல்வளைவில் உச்சமான வெள்ளு – வெள்ளியென வெளிப்பு வெள்ளாய்ப் "பர" என்று மேம்பட்டு நிற்கையில் அந்த வெள்ளிஒள்ளின் பண்பு பாடுற்று முறையா கையில் ஒள்ளி ஒளி என்றே கிளர்ந்து கீழ்நிலையும் மேல்பாகத்துக்கு ஒத்த ஒப்புத்தன்மைத்தாய்த் தலைப்பட்டது. இவ்வாறு பரவெளியின் உச்சிப்பாகம் பரப்பொருளால் உச்சிப் பர வெளிப்பாகி. அவ்வெளிப் பிலே பரப்பொருள் பரவுஆகப் படிந்து, படிந்து பாகமுறையாகப் பர என்ற பரப்பு பரம்பொருளாயிற்று. அந்தப் பாகமுறையில் வலப்பக்கம் ஒள்ளிஒள் என்றும், இடப்பக்கம் வெள்ளி ஒள் என்றும் நாம் நேரலாம். இங்கு ஒள் பொதுத்தன்மையாக. வலப்பால் ஒள்ளி இடப்பால் வெள்ளி ஆகச் சிறப்புத் தன்மை ஒன்றிய ஒன்றுக விளங்கிற்று என்க. இவ் வாறு விளங்கும் பரம்பொருளாம் தீவண்ணக் கோலத்தில் ஒள்ளிலிருந்த வெளியில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வெளியில் இரேகை இரேகையில் அத்தலை
சுளியில் உகாரமாஞ் சுற்றிய வன்னி
தெளிதரு கால்கொம்பு நேர்விந்து நாதந்
தெளியும் பிரகாரஞ் சிவமந் திரமே"

என்று திருமந்திரம் தெரிவிக்கும் முறையில் ஒளி விளக்கங்களாகப் புலப்படலாயின. நெளிவு சேர்ந்தகோடு ஒளியாகிய விந்து ஆகும் நெளிவில்லாத நேர்கோடு ஒலியாகிய நாதமாகும் என்று பௌதிக விஞ்ஞானத்திறனை நம்சிவதத்துவம் ஞானமாகக் காட்டப்பட்டுள்ளது காண்க. பரநிலைவெளி என்ற பரவெளியின் உச்சிப்பாகம், பரவெளியின் ஏறுநிலையால் விளக்கமாகப் பாகப்பட்டுப் பொதுநிலைப்படுவதாகும் ஏறுநிலையின் உச்சிப்பாகம் ஒள்ளியாம். இறங்கு நிலைப்பாகம் வெள்ளியாம். இவ்வெள்ளி வெளிப்பிலே நெளிவு சேர்ந்தகோடும் நெளிவில்லா நேர்கோடும் விந்து – நாதம் என முறையே புலப்பட்டதை இன்னும் தெளிவுறுத்துவாம்,

பரவெளி – பரநிலை வெளியாய்ப் பரத்தலிற் சிறப்புறவே நிலை வெளியின் ஒளிவடிவம் காலற்ற ஒகாரவடிவம் (ஒ). பரவெளியின் நாதாந்த எல்லையில் ஏற்பட்ட பரநாதம் ஒற்றைக்கொம்பு (ெ) வடிவம் அந்த எல்லையிலிருந்து பரவுச்சி எல்லை மேற்பாகம் வரையும் வடிவம் இரட்டைக்கொம்பு (ே) வடிவம். இது பரவெளியின் முன்பக்கமான, ஏறுநிலை வெளியைச் சுட்டியவாறும். பரவுச்சி மேற்பாகம் சிறுவட்டமான சுழியே விந்தென்று அமைந்தல் இறங்குநிலைப் பரவுச்சியை விளக்குவதற்கேயாம். ஆனால் உண்மையில் ஏறுநிலைப் பரவுச்சி சிறு சுழியற்றுப் புள்ளி கொள்ளும் வளைகோடு என்க. இந்தப் புள்ளிக்கோடு இறங்குநிலைப் பக்க உச்சியிலிருந்து கீழ் நோக்கி அப்பக்க அந்தத்தில் இறுதல் விந்தாக இரட்டைக்கொம்பு (ே) போல் நிலைக்கையில் இறங்குஉச்சி மேல்நிலைப்புள்ளி சிறு சுழியாய்க் கீழ்வளைந்து இறங்கு நிலை வெளியைக் கீழ் புலத்தில் உறல் வேண்டும். இல்லையேல் பரநிலை வெளியின் உச்சிப்பாகத்தின் எல்லைப்பரவு நம்மால் உணரமுடியாது போகும். பரவெளியின் உச்சி வேக விசையே பரவெளியுச்சிப் புள்ளியைச் சிறுசுழியாகச் சிறப்புறச் செய்து ஏறு – இறங்கு என்று பக்கத்தை இருமையாக்காது ஒருமையாக்கியது. இஃது உச்சியின் மேல் நிலை மேன்மை குறித்தவாறும். அந்த மேல்உச்சி வேக விசையின் அதிர்வால் கீழ் பக்கத்தில் கிளர்தலாகும். மேல்நிலையின் நாதவிந்தோ தன்னுற்றலைப் பாகநெறியாகக் கீழுற்றுப் பரநிலையின் கீழெல்லை மையத்தின் புள்ளியில் விரிநிலை இருப்பாகக் கொள்ளும். எனவே பரஉச்சி வெளியின் மேல்பாகவிந்தாம் ஒளியும் ஒரு பெற்றியும் பெறுத சார்பிலாத் தனியானது, கீழ்பாக விந்தாம் ஒளி ஆற்றல் ஒளியாய் ஆதார ஆதேயப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றியதான தனிநிலையானது என்றுந் தேர்க. மேல்நிலை 'சி' என்றும் கீழ்நிலை சிவ என்றும் ஓர்க. 'சி' சுத்தமான தனிநிலை, சிவ – சுத்தமான இணைவுத்தனிநிலை என்று எண்ணிக்கொள்ளல் வேண்டும். இதனைத் திருமந்திரம்,

- மட்டவிழ் தாமரை மாதுநல் லாளுடன்
ஒட்டி யிருந்த உபாயம் அறிகிலார்"

என்று உச்சியின் மேற்திறனும்,

"மாதுநல் லாளும் மணாளன் இருந்திடப்
பாதிநல் லாளும் பகவனும் ஆனது"

என்று அதன் கீழ்பால் பெற்றித்திறனும் பகர்ந்துள்ளது. இவ்வாறு பர நிலைவெளியின் தன்மையையும், பரம்பொருளின் தன்மையையும் மேலும் ஆய்க.

## வெளி ஒளிப்பொருள்: அருவுருவம்

ஒளி–உருவம், வெளி–அருவம், இஃது ஏறுநிலைப் பரவெளிக்குரியது ஒளி–அருவம் வெளி–உருவம் இஃது இறங்குநிலைப் பரவெளிக்குரியது. பரவெளி உச்சியின் பரப்பில் ஏறுநிலைப்பக்கம் ஒள்ளி. அதனால் இங்கு இரேகை, சுழியுள்ளரேகை, நேர்கோடு என்பன புலப்படாவாதலால் அருவம். இறங்குநிலைப்பக்கப் பரவெளி வெள்ளி. இஃது ஒள்ளிவெளியின் ஆற்றல்வெளி. இதனால் வெள்ளியில் புள்ளி, நெளிவுரேகை, ரேகை என்பன ஒள்ளியலாய்ப் புலப்படும். அதனால் அருவமான வெள்ளி இருப்பில் நெளிவுரேகை, ரேகை (விந்து–நாதம்) இருத்தலாய் உருவுற்று அருவுருவமாக அமைந்திடும். இந்த அமைப்பில் வெள்ளி-சிகாரமாயும் அதன் குறிஒள்ளி வகாரமாயும் சிவ என்று காண்பிக்கும் ஒரெழுத்தாம். வெள்ளிசிகாரமெனில் அவ்வெள்ளியில் உள்ளவெளிப்புஅகாரம். ஒள்ளி வகாரமெனில், அவ்ஒள்ளியிலுள்ள ஒளிப்பு உகாரம். வெளிப்பும் (அ) ஒளிப்பும்(உ) கலப்பாய்க் கனலுகையில் அவ்–காரம். இதுவே ஓங்காரம் என்ப. ஒளிப்பு, ஒளித்தல் என்று கரத்தலாயும் ஒளிர்தல் என்று அரத்தலாயும் இயலுறும். எனவே ஒள்ளி–ஒளிப்பாகும் போது வெளிப்பில் ஒளிவீசலாயும் ஒளிவீசாததாயும் பாடுறும். ஒள்ளி-சி: ஒளிப்பு–வ. ஒளிப்பு ஒளிர்தலாகையில் உடன்பாடான வகார ஆற்றல். அஃது ஒளித்தலாகையில் எதிர்மறையான வகார ஆற்றல். உடன்பாடு வெளிப்பு அருட்சத்தி. உடன்படாத வெளிப்பு மருட்சத்தி என்று தெளிக. இவ்வாறு வெளியின் ஒளிப்பொருன்ன் இயக்கத் தன்மையைத் தேர்க. இதனால் வெளியின் ஒளிப்பொருள் ஒளிமுறையில் சி–வ என்றும், வெளிமுறையில் அ–உ என்றும் தேர்க. இவை வடிவமாகும் போது வெளியானது ஒளிமுறைக்குப் பொதுமையாகவே ஒளியின் அருவம் உருவம் மயங்கிய ஒன்று வடிவமாகும், அந்த ஒன்றே வெளியின் ஒளிப்பொருள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில்.



இஃது இயக்கப்பொருள் வடிவமாகும் போது அருவமாதல் விந்து; உருவதல் நாதம். அருவம்-சி உருவம்-வ. சி-பரம்பொருள், வ-பராசக்திப் பொருள் பரம்பொருளே அருவாய் விந்து ஆகிறது. இந்த விந்தே அடியில் விரிந்து இடையில் குவிந்து முடியில் விரிந்து சிவக்குறியாகிறது. இதனைச் சிவலிங்கம் என்ப. இதில் நெளிவு கோட்டுப்பகுதி கீழ்ப் பாகம். அதில் உயர்வாய் உள்கவிந்த வளைவுவடிவப் பகுதியே மேற் பாகம் விந்துவிலிருந்து கிளர்ந்த கிளர்நாதமே சிவ என்னும் ஒரெழுத்தினது குறி. சிவலிங்கத்தின் அடிப்பகுதி 'அ' எனவும், நடுப்பகுதி 'அர' எனவும் முடிப்பகுதி 'இ' எனவும் எழுத்து (வெளி) உருவில் அமைத்துக்கொள்ளவேண்டும். அ = அறிவு; அர = தொழில்; இ = இன்பம் என்று நேர்க. முடி (நாதம்) உச்சித்துளையில் மகரத்தையிட்டு அத்துளையின்கண் உயிர்ப்புச் செல்வதை உணர்ந்த பின்னர், அவ்விடத்தே 'தொம்தோம்' என்று திருக்கூத்தியற்றும் பரப்பொருளைப் பராசக்தி நோக்கமாகவே சுடர்க்கொழுந்தினைக் காணுதலாகும். இதுவே சிவலிங்க வழிபாடு என்ப. இவ்வாறு வெளியின் ஒளிப்பொருளின் அருவுருவத்தின் பொருளும் பொருட்பயனும் ஆன்மாவின் ஞானசத்தியால் மனம் முதலியவற்றோடு கூடிநின்று பாவித்தல் நமது பிறப்பின் கடன். சிவலிங்கத்தின் எழுத்துருவை மேலும் விளக்குவோம்.

கருதலளவைப்படி சிவலிங்கத்தின் அடிப்பகுதி 'அவ்வு' ஆனல் அந்த அவ்வொரு 'சவ்வு'ம் அமைந்த தொன்றுகும். இந்தச் 'ச' கரம் ஆங்கு மறைநிலைப் பொருளாகும். இதனல் சிவலிங்கத்தின் அடி நம்மால் தெளியமுடியாத தொன்றுகும். அடி இவ்வாறுயின் முடி எவ்வாறும்? மறைபொருளரன சகரமே 'அர' என்று நடுவுற்ற முறையானது. 'அர' என்ற முறையானது 'இ' இயலால் அரி என்றும் இயல்பு இயின் நெறியால் அரன் என்றும் அமையும். இ-இயலான முடித்துளையில் 'ம' கரப் பெற்றியால் அரி, அ-ரீம் என்று 'அ' பொதுவெளியாயும் 'ரீம்' சிறப்பு வெளியாயும் மிருவதாம். ரீம் என்பது மாயையின் வித்தெழுத்தாதலின் சிறப்புவெளி மாயாவெளி என்க. 'இம்' என்பதில் மகரமெய் மாயை என்றல் 'இ' பொதுவெளியில் இருத்தலான இறை என்க. இந்த இறை மாயாநாடன் என்றும் இயம்பப்படும். மாயை என்ற சொல் மா+ஐ என்று பகுபடுகையில் மா-கருமை; ஐ-தலைவன். எனவே கருமையான தலைவன். கருமை மறைதலைச் சுட்டலால் மறைத்தலைவன் திரோதானன் மா (கருமை) வுடன் ஐ பொருந்துகையில் 'ய' என்க.. ஐயினுக்கு உடன்படுமெய். இஃது உயிரின் குறியெழுத்து உயிருக்கு மறையாகக் கருமையான இருளை இருத்தல்புரிதல் மாய்த்தரில் பண்ணும் 'மாயோன் என்றே தெளிதல் வேண்டும். மா + ஆவி = மாயாவியானது. அது கடைக்குறையாய்மாயா எனப்பட்டலும் ஓர்க. இது 'மா' வினற் கட்டுப்பட்ட ஆவி மாயா எனப்படும். இந்த ஆவிக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்தொழிற்றலைவனாய் அமைந்து ஆகுபெயரோனாய் மாயை எனப் பட்டது. இப்பெயரோனே பரமான்மா ஆகும். இவ்வாறு வெளியின் ஒளிப்பொருள் எழுத்துருவில் தத்துவத்தின் விளக்கமாதல் தெளிக. இனி, நாம் வெளிசுட்டும் மாயா வெளித்திறனை நோக்குவாம்.

வெளியில் வெளிப்பான 'அவ்' என்பது 'வ' கரமாக ஒளிர்கை யில் வனப்பு (ஞான) ச்சக்தியாக விழுப்பமாகையில் அகரப் பொதுச் சத்து சிகாரச் சிறப்புச்சத்தாய் அமைந்து சீராகையில் "அம்" என்று ஆங்கே அமைந்து 'ம' கரமாக மன்னும், ம-நாதம், சிறப்புச்சத்தாய சிகாரம் சிவ்வுச்சத்தாய்ச் சிவதத்துவமாகும், இத்தத்துவத்திற்கு அகரம் பற்றுக்கோடாயின் 'ம்' அதற்கு எங்ஙனம் பற்றுக்கோடாகும். என்ற வினா பிறக்கும். இதுவே தொழிலுக்குக் காரணமாய் நிற்கும் நடப்பு (கிரியா) சத்தி நிற்கையதாய்ப் பரிக்கிரகசத்தியாகும். இஃது இறைசத்திக்குத் தேவைப்படும் போது உதவும் உதவிச்சத்தி என்ப இவ்வாறு உதவிச்சத்தியாக நாதசிவத்துக்கு உதவல் மாயாவெளிப்பு வெளியில் என்க. மா - கருமை, யா – யாத்தல், கருமைப் பண் பொளிர் மையால் கட்டுதல் கொண்ட வெளிப்புவெளி "மாயாவெளி" ஆதலின் இதனையும் அந்த மகார எழுத்தின் மெய்யெழுத்த (ம்) அமைத்துக் காட்டுவதாகும். இஃது ஒள்ளின் ஒளிப்பு மறைப்பு ஆகலாகவும்,வெளிப்பு ஆகலாகவும் பொருந்தும் என்று முன்னர் கூறினும். நாம் முன்னால் ஒலிமையினது வளர்முறையில் கர்-கரி-கர என்று காட்டியதும் காண்க கரியான சக்தியைக் காத்தலாக உடைமையாக்கியதும் அது "கரன்" என்பதாகும். இதனையே கருநீல நிறத்தவளான மாதுநல்லாள் தன் மணாளனாகிய சிவனார் தனது மெய்யினில் செம்பாதி கொள்ள இடங் கொடுத்துப் பாதி நல்லாளாயினள் என்ப. இதனால் சிவனாரும் பகுப் புடையன் என்ற கருத்தில் பகவனாயினன் என்பர் திருமூலர். அரகர என் பதில் 'கர' என்ற சொல் விளக்கம் ஈண்டுந் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

பரம்பொருள் பேசா எழுத்தாம் 'சி' என்க. இது 'வ' உடையது. பரம்பொருள் பராசத்தியாகப் பரிணாம் பெறுகையில் பேசும் எழுத்தாம் வ' என்க. இதுவும் 'சி' உடையது. பராசத்தியான வவ்வு பரிணத்தி லிருந்து பரிணமம் பெறுகையில் சிவ்வு என்ற சியோன் காலமுன்னுகை நிற்கையில் கர்மை அணமான (காரண) சதாசிவம் என்று சாதாக்கியம் ஆகின்றது. இஃது பரவெளி உச்சியின் கீழ்பால் கிளர்வதாகும். சி- இடமாக வசி என்று அச்சிகாரம் அமைகையில் கர்மை அவ்விடமான (காரியம்) வெளிவெளிப்பானதும் சதாசிவம் என்று சாதாக்கிய தத் துவமாகின்றது. இஃது இறங்குநிலை வெளியில் மையநடுவுள் நலப்பட்டு ஈசனை அருவத்தில் சக்தி தன்னையொழிய மற்றெவரும் ஒவ்வாதவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில்.



ரென நிற்கும் கலைகளாலே தியானமூர்த்தியாக நிரம்புவது சாதாக்கியம் காரணம், காரியம் என்ற நிற்கை 'வவ்வின் உள்ள சிவ்வாம் சிவமே யொழிய 'சி' என்ற சுத்த சிவமன்று. இங்கு சிவ்வில் வவ்வு நிறையாக இருக்குமே யொழிய உடைமையாக இருக்காதென்றுந்தெளிக

பராசத்தியின் ஞான ஆற்றலே நாதமென அபரவிந்துவாய்ச் சிவதத்துவமாகவும், கிரியா ஆற்றலே விந்தெனப் பரவிந்தாய்ச் சத்தி தத்துவமாகவும் இறங்குநிலைப் பரவெளியின் முன்னிடப் பரப்பு முழுவதையும் தத்துவப்படுத்துகின்றது. இந்த முன்னிடப்பரப்பு இறங்கு நிலைப் பரவெளியின் மையத்தின் மேல்பாகமாகும். இப்பாகம் முழுவதும் 'அர' இயல்பாய்த் தத்துவப்பட்டதென்க. அபரவிந்தாம் 'சி' விடாத எழுத்தாதலின் தான்கீழ் தலைப்பட்ட தத்துவ ஒளிப்பொருள்களை ஈர்த்துக் கொள்ளும் தன்மைத் தாதலின் இச் 'சி' யின் தத்துவம் இலயம் என்றும், சியோன் இலயசிவம் என்றும் இயம்பப்பட்டது. 'சி' யினுல் விட்ட எழுத்தாக வகாரமாம் சக்தி 'சி' யினும் அபரமாக நிலைப்பட்டாலும் தன்வயத்ததாதற் சிறப்பால் பரவிந்து எனப்பட்டது. தன்வயத்ததான சிறப்பாளுலும் 'சி' யின் விடாத ஆற்றலால் மைய வெளியைக் கடக்கமுடியாது மையத்தின் மேல்நிலை வரையுமே காரியப்படுதலைச் செய்யும். அவ்வாறு காரியப்படுதலை ஆற்ற முற்படும் போது 'சி' யின் விடாஇயலாம் ஈர்ப்புந்திறனுக்கு உட்பட்டு சார்பூக்கமாய் மேல்நோக்கி அபரவிந்துக்கு அண்ணுதலாய் அணுகும். அவ்வாறு விந்து 'சி' யின் தத்துவத்தால் மேலும் தனது தன்வயத்தை மிகுத்து அதனை நோக்கி 'அர்' என்று சுழல்வளைவாய்ச் சுழல்வேக ஒலிமை கொண்டு அப்பரப்பினை அர என்றே மிகுத்து வைத்துக்கொள்ளும் 'சி' அபர இயலால் அசைவில்லாத தத்துவமாதலின் அணுக்கமான வகாரம் 'சி' யின் பொருட்டிணிவையும் இயக்கமாக்கிப் பராசத்தியாம் ஆதிசத்தி முன்னிடம் முழுவதையும் உட்கொண்டது. அந்த உட்கொண்டலில் முன்வெளியியலின் 'கர' இயல்பு கட்டுப்பட்டது. இதனையே மாயா என்று இயம்புதலாயிற்று. இதற்கும் இலயம் என்பதற்கும் சொற்பொருள் விளக்கம் மிக்க ஒற்றுமையுடைத்து, பரவிந்து அபரவிந்தை மருவியதும் சத்தி ஆதிசத்தியாயிற்று. மாயாவெளியையும் பராசத்தி வேக அதிர்வில் இயங்கலுற்று மாயையாயிற்று. இவ்வாறு பராசத்தி இறங்குநிலைப் பரவெளியை அர்மை மிகுத்து மேம்பட்டும், கர்மை மிகாது கீழ்ப்பட்டும் விளங்குதலாய் இறங்குவெளியில் மையத்தின் மேல்பால் எல்லையில் சிவ என்று ஒன்றலாயும். மையநடுவுள் 'வசி' என்றுமாறு ஒன்றலாயும். இதன் கீழ்பாலம் கடைபால் சி-வ என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றல் அற்றதாயும் இவ்வாறுஇறங்குநிலைப் பரவெளியின் மையவெளிப் பரப்பு முத்திறனாக நிலைப்பட்டது. மையவெளி என்றால் நடுவுள் என்ற பகுப்பே பொருந்தும். இதன்மேல்பால் இறங்குநிலையில் முன்னிடத்தின் இறுதிப் பகுதியாதலின் அதனைச் சுட்டாது. இங்ஙனமே நடுவுள் கீழ்பால் அவ்இறங்குநிலைப் பரவெளியின் பின்னிடத்தின் தொடக்கப் பகுதியாதலின் அதனையும் சுட்டாதென்க. எனவே மையஒளிப்பொருள் வசி என்ற 'வ' என்க. இதுவே காரிய சதாசிவம் எனப்படும். ஆதிசத்தியாம் அருட்சத்தியைத் தன் திருமேனியாகக் கொண்டு திகழும் சியோனே காரிய சதாசிவம் என்க. இச்சிவமே இறங்குநிலையின் பின்னிடவெளியைக் காரியப்படுத்துவர். அப்படிக் காரியப்படுத்துங்கால் ஞானம் குறைந்து கிரியைமிகுந்து விளங்குதலால் மகேசுவரன் என்ற அதிகாரசிவன் ஆவான். அவனே மீண்டும் கிரியை குறைந்து ஞானம் மிகுந்து இறுதலால் சுத்தவித்தை என்னும் தத்துவத்தைப் பெறுவான். சுத்தவித்தையனான ஈசுவரனையே திருவள்ளுவர் "வாலறிவன்" என்றார்.

மையவெளி ஒளிப்பொருளாம் காரிய சதாசிவமே 'வசிய' என்று எழுத்துருவில் இயம்பப்படுவர். சிவய என்பதிலுள்ள யகாரம் ஒளியானது. வசிய என்பதிலுள்ள யகாரம் இருள் ஒளியானது. இதனால் இறங்கு நிலை மையத்திற்றான் உயிர் இருளால் அணு என்று தத்துவப்படுகின்றது. மையத்தில் வசியான அருளோன் பின்னிடவெளியில் மகேசுவரனாகையில் பொருளோனுவன். அந்நிலையிலேயே சிவய என்று எழுத்துருவில் நிலைப்படுவன். பொருளின் நிலையால் அதிகார தத்துவம் உடையனாகின்றான். இவன் தன் அதிகாரத்தைச் செலுத்துகையில் தன் நிலையில் அரன், அரி, அயன் என்று ஒளிப்பொருளாய்ச் சிவபெற்றியாயும் தான் அயல் நிலையாகையில் அவ்வாறே அரன்,அரி.அயன் என்று வெளிப்பொருளாய்ச் சீவபெற்றியாயும் மிகுந்து முத்தொழிலின் முழு அதிகாரியாவன் என்றும், இவ்வாறு பின்னிலை இறங்குநிலையைத் தேர்க. காரியசதாசிவத்தின் காரியப்பாட்டைத் திருமந்திரம்;

"வேதா நெடுமால் உருத்திரன் மேலீசன்
மீதான ஐம்முகன் விந்துவும் நாதமும்
ஆதார சத்தியும் அந்தச் சிவனொடும்
சாதா ரணமாம் சதாசிவந் தானே"

(திருமந்திரம் 1700)

என்று இறங்கு வெளியின் பின்னிடப்பெற்றி இயம்பியுள்ளமை காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவதத்துவம் தழுவும் விஞ்ஞானம்

## சிவ: பொதுவிளக்கம்

மூலஒள் 'வ்' (இவ்) என்ற வடிவுடைத்து. இனிதான தூய வெண் (இந்து) இயல் ஒளியுடைத்து என்பதை விளங்கியவர் மூலமாகிய விந்துவைக் காண்பர். (இவ்) - 'வி' என்று புணர்நிலையிலேயே மூல - மூலம் ஆகி விந்து என்று பொருட்பெற்றியதாயிற்று. இப்பொருட்பெற்றியிலேதான் 'ஒல்' என்ற அசை (நாத்) முறைக்கு மூலம் என்ற விந்து சீருற்றது. அந்தச் சீர்நிலை விந்தே ஓசை (நாத) என்பதற்கும் மூலமாயிற்று. ஓசைக்கு மூலமான விந்துவின் வடிவு 'உ' என்று உன்னப்படும். இஃது விந்துவே நாதமாகப் பரிணம் ஆயிற்று என்பதை உணர்த்துவதாயிற்று. 'உ' வடிவான நாத வெளியிலே சுழி மறைந்த அகரவடிவே விதியாய் விளங்கல் வேண்டும். அந்தவிதி விளக்கத்தை ஆய்ந்த சிவஞானியர் சுழிபுலப்படாத அகரம் சுழியாம் விந்து உண்டா? இல்லையா? என்றனர். மேலும் சுழியற்றதாயின் சகரமாக வேண்டும். அவ்வாறு சகரம் என்றால் மெய்யா, உயிர்மெய்யா என்று தடுமாற்றம் மிகவே அந்த ஆய்வில் அதனை நீளநினைந்தனர். அவ்வாறு நினைந்தவர் இஃது பரவெளி உச்சியின் மேல் - கீழ்பால் 'அம்' என்றதன் மகரமே இதற்குரிய எழுத்தாதலின் அதனுடன் கூட்டிச் சகரத்தை நோக்கின் 'சம்' என்று வருவதால், மெய்யொடு உயிர் மெய் என்பர். உச்சிமேல் நிலையில் அகரத்துடன் கூட்டி அச்சகரம் காண்கின் 'ச' என்று வருதலால் மெய் என்பர். இவ்வாறு இருபாற்பட்ட சிந்தையராகிய சிவஞானியர், பரஉச்சி வெளியிடத்தை மேல் - கீழ் என்று பகுத்துப் பார்க்காமல் அவைகளைத் தொகுத்துப் பரவெளி உச்சியை முழுமையாக ஓர்தலில் ஒண்மை பெற்றவர்கள் 'அறம்' என்று ஒன்றின் பாற்பட்டு 'அவ்வொடு சவ்வும் அநாதி' என்று தொகுப்பறிவுக்கும் அப்பாற்பட்ட தொன்மைத்து என்று தெரிவித்தனர் இதுவரையும் மூலப்பொருள் அறிவரியநிலை கூறினோம். இவையெல்லாம் ஓசை ஒலிக்கையில் அந்த ஒலி வடிவம் வரிவடிவமாகப் புலப்படுதல் விஞ்ஞானத்தில் பௌதிகத்திறனுடைத்து என்றே துணிவுறவேண்டும்.

மூலஒள் எழுகையாகையில் 'அண்' என்ப. அந்த அண் என்ற ஒள் 'உ' வரிவடிவென எழுச்சி பெறுகையில் அணுவொள் என்று எழுச்சியாகப் பெயர்ந்த பொருளின் பெயராகும். பெயர்ந்த பொருள் மூலத்தின் மூலப்பொருள். மூலத்தின் மூலப்பொருளான ஒள்ளணு என்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கு விஞ்ஞானப் பெயர் 'ஆடம்' என்பது, இது கிரேக்க மொழிச் சொல், இச் சொற்கும் கருத்து 'பிரிக்க முடியாதது'; வெகுவேகமாக இயங்கிக் கொண்டிருப்பது என்பதாம். இது நமது தத்துவத்தில் பேசா எழுத்தாம் 'சி' என்பதற்கு நேரானது. எனவே ஒரெழுத்தான 'சி' எழுத்தின் பொருளும் பிரிக்கமுடியாதது; செயல் இடையறுது நிகழ்த்திக் கொண்டிருப்பது என்று நமது சமயம்சாற்றியது உண்மையேயாம். இவ்வாறு தத்துவத்தையும் விஞ்ஞானத்தையும் இனிவரும் எடுத்துக்காட்டில் இதனைப் படிப்போர் சிந்திக்கவேண்டும்.

அணுவானது, விடப்பட்ட விகிதத்திலே சேருகின்றது' என்ற விஞ்ஞானப்படி, ஈண்டுச் சிகாரத்தால் விடப்பட்ட வகாரத்துக்கு இசைவாகிறது என்பதில் சிவ இயைவுறுகிற தென்பதால் சி – விடாஎழுத்து என்பது விஞ்ஞானப் படியும் உண்மையாயிற்று.

அணுக்களின் வீதாசார (விடப்பட்டதன் சிறப்பு)க் கலப்பே பொருள் வேற்றுமைக்குக் காரணம் என்பர் விஞ்ஞானியர். இங்கு விடப்பட்டது பராசத்தி. இதன் சிறப்பு ஆதிசத்தியின் இச்சா - ஞானக் கிரியை என்ற முத்திற சத்திகளாகத் தொழிற்படுதலைச் சுட்டியவாறு. இம்மூன்றும் சிவசத்தியாதல் புலப்பட்ட முறையே கலப்பு என்றது. இங்கே பரஅணுவான சிவன் ஞானசொரூபமான சிவசத்தியின் சிறப்புத்திறனுல் இச்சா / ஞான கிரியை என்ற வகைகளைப் பொருந்தலாம் கலப்பில் சிவம் ஞானத்தால் அருவத்திருமேனி ஞானம்கிரியை சமமாகக் கலப்புறப் பொருந்துகையில் சிவன் பொருந்தல் அருவுருவம் – சதாசிவம், கிரியை கலப்பில் மிகின் சுத்தவித்தை என்று தடத்தலக்கண விளக்கம் அவ்விஞ்ஞான விதிமுறையைத் தெளிவாக்குகின்றது.

சிவம், சத்தி, நாதம், விந்து, சாதாக்கியம், ஈசுரம் என்பன மூலப்பொருள்களின் ஒளியியலாம் அணுவும், கனத்தினுல் (நிறையினுல்) வேறுபாடுடையவை. ஒரே கணம் (நிறை) உள்ளதான இரண்டு மூலப்பொருள் வவ்வும் சிவ்வும் என்பவைகளை (வ, சி) எடுத்தால் இரண்டிலும் உள்ள ஒளி இயலாம் அணுக்களின் (பொருட்டிணிவுப் பொருள்கள்) எண்ணிக்கையில் வேருகும். சி. வ = காரணம்; வ. சி= காரியம் என்றதே அவ்வேறும். இந்த வேறுடைத்து வசி என்ற ஒன்றை வ-சி என்று பிரித்தால் மூலப்பொருள் அத்தன் - அன்னை என்று இரண்டாகவோ, அரன் அரி அயன் என்று மூன்ருகவோ, சிவசீவ முறையிற் பலவாகவோ பொருந்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலப்பொருள் கலப்பில்லாதது இது பேசா எழுத்துருவான 'சி' என்பதற்கு நேர்விட்ட எழுத்து, இதனால்அது விடாதஎழுத்தெனப்படும். ஓரெழுத்தென்ற மூலஎழுத்துக்கள் சி, வ என்ப. சி யில் வவ்வும், வவ்வில் சியும் ஒன்றோடொன்று கலந்து கூட்டுப்பொருளாகும் போது குறிப்பிட்ட கன (நிறை) விகிதத் (விடப்பட்ட) தில் சேருகின்றன என்பது விஞ்ஞானம். இந்த விஞ்ஞான வரைவே விட்ட, விடாத எழுத்துக்களை விளங்கிக்கொள்வதற்கு மிகவும் உதவுகிறது. விட்ட எழுத்தான வவ்வு சிவசத்தி. வவ்வுச்சக்தி விடப்பட்ட நிலையான தனிநிலையில் கன (நிறை) விடப்பட்ட கனமாம் நிறையிற் சிகாரத்தின் விடாநிலையான நிறையும் அதில்பொருந்தியுள்ளது. எனவே வகர சத்தியின் விடப்பட்ட நிறை இதனால் இயல்பு மிகுவதில்லை. அதன் இயல்புக்குத் தக்கவாறே சேருகின்றது என்பதாம். இதனாலேயே சத்தி யெனாது சிவசத்தி என்பதன் நுட்பம் இஃதென்க. இது கொண்டு சிவசத்தியின் நிறையுடைமை கணித்தல் அரியதொன்றாகும் என்பதிலும் ஐயப்பாடில்லை. இதனால் சிவசத்தியும் பராசத்தி போலவே பகரப்பட்டது. தனித்துவம் கலந்து உள்ள மயக்கத்தையே சத்தியைப் 'பரா' என்ற அடையால் விளக்கப்பட்டது. வவ்வாம் சத்தியின் கன விகிதாசாரம் விடப்பட்ட நிறையில் ஒன்றற்கொன்று இணக்கமற்ற முறையினைத் தெளிவாய் உணரின் சிவ என்ற ஒரு மூலப்பொருளுக்கும் "ய" என்ற மற்றொரு மூலப்பொருளுக்கும் ஒன்றோடு ஒன்று கலந்து 'சிவய' என்று கூட்டுப்பொருளாகும் போது பருமைப்படும் நிறை (கன) விடப்பட்ட (விகிதத்தில்) முறையிற் சேருகின்றன என்ற மற்றொரு விஞ்ஞான விதிக்கூற்று. இம்மூவெழுத்தின் ஒத்த ஒப்பான இணைவுக்கு இழைவுதரும். எவ்வாறெனில் 'சி' ஒளி நிறை தன்னிலையில் ஒன்று. வவ்வைத்தழுவும் தடையிலா நிலையில் வவ்வில் ஒன்றாம் அவ்வாறு யவ்வைத்தழுவும் தடையுற்ற நிலையிலும் வேறாம். இவ்வாறு ஒளியானது சிவ்வில் சிவ ஒன்றாயும் வ வவ்வில் வேறாயும் விடப்பட்ட நிறை இருந்தாலும், 'சி' யினால் வவ்வுக்கும், வவ்வினால் யவ்வுக்கும் நிறைவிடப்பட்டதால் அதன் தன் தன்மையின் நிறையில் குறைவிடாதபடி விடப்பட்ட நிறை நிகழ்தலின் சிவய, ஓர் சீராயிற்று. இதனாலேயே சிவப்பொருளைக் குறைவிலா நிறைவே என்றனர் இது. சிவ வினையொட்டி யவ்வுக்கும் ஒக்கும் இதிலிருந்து சிவ என்பது யவ்வை ஒட்டி ஒத்த ஒப்பாக ஒளிர்வது சொரூபத்திலன்று தடத்தத்தில் என்பதாயிற்று சிவவின் தடத்தத்திலேதான் யவ்வின் சொரூபம் ஒட்டாற்றலால் ஒப்பாய் ஒளிர்கின்றது என்பதும் அறிவுறுத்துகின்றது.

★ ★ ★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவய என்பதில் 'சி' யின் விடாநிலையில் ஏற்படும் 'ய'கரத்தின் நிறையில் விடப்பட்ட சிறந்த பொருண்மை ஒன்று. வசிய என்பதில் 'சி' யின் விடாநிலையில் ஏற்படும் 'ய'கரத்தின் நிறையில் விடப்பட்ட சிறந்த பொருண்மை அதுபோல் அமையாத வேறொன்று. முன்னது முறையுடையது; பின்னது முறையிலாதது. முறையுடையது ஒளி நிலையது. முறை பிறழ்ந்தது. வெளி நிலையது. முன்னதின் சிவ–பகு நிலையது. பின்னதின் சிவ என்பது வசி என்று தொகுநிலையது. இவ்வாறு வேற்று நிலையினவான அவற்றின் பொருட்டிணிவாம் எடையும், விகிதாசாரமாம் விடப்பட்ட சிறந்த பொருண்மையும் ஒவ்வாமை வெளிப்படை, இதனைக் கருதியே சிவய காரணம் என்றும், வசிய காரியம் என்றும் விதத்து கூறினர்.

★ ★ ★ ★

மூலப்பொருள்களின் அணு ஒவ்வொன்றிலும் அந்த மூலப்பொருள்களின் தன்மைகள் எல்லாம் அமைந்திருக்கின்றன" என்ற விஞ்ஞானக் கருத்து நோக்கில் ஒரு மூலப்பொருள் சி என்க இதன் அணு 'வ' எனப்படும். 'வ' என்பது வனப்பாம். வனப்பு–ஞானம் என்ற ஒளி சுட்டும். எனவே 'சி' என்பதும் இத்தகையதே. என்பதை நாம் சிறந்த முடிவு கொள்ளலாம். எனவே 'சிவ' என்பதே ஒரு மூலப்பொருள் என்று முடிவுறல் முறையதாகும். இன்னொரு மூலப்பொருள் 'ய' என்பது. இதன் அணு 'ம' எனப்படும். ம – மலம். மல்+அம் = மலம் ஆகும். மல் – வலிமை, வளம் என்ற கருத்துக்களைத் தரும். இந்த இரண்டு கருத்துக்களும் யகர மூலப் பொருட்குப் பொருந்தும். வலிமை என்றது மருளாகும் இருள் சுட்டும். வளம் என்பது அருளாகும் இருளின்மை சுட்டும். எனவே யகர மூலப்பொருள் இருள்ஒளி உடையது என்று சிவ என்ற ஒளியாம். மூலப்பொருளின் வேறுனது என்று முடிவு கொள்ளலாம். சுத்த ஒளியான 'சிவ' என்பது சுத்த மற்ற இருட்கலப்பு உடைய 'ய' என்ற வேறுவகை மூலப் பொருளோடு திரல்படுகையில் சுத்த ஒளியான 'வ' என்பது தனி மூலப் பொருளாகிறது. இதனையே 'வ' விட்ட எழுத்து எனப்பட்டது. 'சி' – விடாத எழுத்து எனப்பட்டது. இவ்வகையில் வ என்ற தனிப் பொருள். இயற்கையில் சியின் ஒளியாயும் செயற்கை (யகரம் ஒட்டிய நிலை) யில் சியின் ஒளியற்றதாயும் அமைகிறது. சியின் ஒளியில் 'சிவ' என்றும் அவ்வொளி அற்ற நிலையில் வசி என்றும் மூலப் பொருளின் பொருள் தன்மையைத் தேறுதல் வேண்டும். சிவ–வ என்று வசி – ந என்றும் வகர நிலையை ஆன்றோர் காட்டியுள்ளனர். ஞானத்தின் மறைவு அஞ்ஞானமாதலின் அஞ்ஞானம் மறைப்புச் சத்தியாம். எனவே ஞானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம் நூலகம்
நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில்.



வெளிப்புச் சத்தியாம். வெளிப்பு அணு 'வ'; மறைப்பு அணு 'ந' இவை முறையே வனப்பு, நடப்பு என்றும் சொல்லப்படும். இவ்வாறு 'சி' என்ற மூலப் பொருளின் திறன் நிலையை ஓர்க. இந்த அணுத்திறம் எவ்வாறு இயைந்ததென்றல் விஞ்ஞானப்படி ஒரு மூலப்பொருளின் அணுக்களும் வேறு மூலப் பொருட்களின் அணுக்களும் சேர்ந்து ஆகும் கூட்டுப் பொருளின் கீழிலக்க (*unit*) த்தை மாலிக்யூல் (*Melecule*) என்பர். மூலப்பொருளின் கீழிலக்கம் ஆடம் அல்லது அணு என்று கூறும் கொள்கையாற் தேறலாம். இதன்படி ஒரு மூலப்பொருளின் அணு 'வசிய' என்க. மற்ற மூலப்பொருளின் அணு 'யசிவ' என்க. இவையிரண்டும் வ(சிய+யசி) வ என்ற முறையிற் சேர்ந்து கூட்டுப் பொருளாகும். இம்மூலப்பொருளின் கீழிலக்கம் என்பது யசிவ என்க. இதில் உள்ள 'ய' என்பதே அணு என்ற உயிர் என்க. வசியின் முன்னிடம் உள்ள யகரம் அணுவாகாது அதக்குரிய ஆவி எனப்படலாம். ஆவியைச் சுட்டும் யகரத்தோடு கூடிய 'சி' மகேஸ்வரன் என்றும், உயிரைச் சுட்டும் யகரத்தோடு கூடிய 'சி' ஈஸ்வரன் என்றும் கருதப்படும். இருநிலைகளிலுள்ள 'சி' ஈசத் என்ற அற்பமலம் உடையதென்க.

★ ★ ★ ★ ★

மூலப் பொருளின் அணு எடையை ஹைட்ரொசன் அணுவின் எடையளவுடன் ஒட்டி இத்தனை மடங்கு என்று விஞ்ஞானம் கணிக்கும். இதனைத் தத்துவஞான முறையில் நேரின் 'ய' வ்வு என்ற மன்னுயிர்கள் 'சி' இயல் சீரில் சிறப்பதற்கு 'வ' இயலின் பெற்றியின் எல்லைக்கு 'ய' இயற்பெற்றி உட்பட்டு அமைகையில் அதன் தகுதி யளவுக்கு அளவாகவே பெறும். இதுவே சத்திநிபாதம் எனப்படும். எனவே 'ய' என்ற மூலப் பொருளின் அணுஎடை (தகுதி) 'வ' கர ஆற்றல் அதன் கண்ணே பதிதலின் பெற்றியைப் பொறுத்தே அளவிட வேண்டுமென்பதை அது தெளிவுபடுத்துகிறதன்றே. இனி ஹைட்ரொசன் அணுவின் எடையே அணு எடையின் கீழிலக்கம் என்ற விஞ்ஞானவிதி. 'வ' வின் புறமான 'ந' என்பதே ஹைட்ரொசன் அணுவின் எடையெனலாம். 'ய' இன் எடையான 'ம' என்பதின் 'ம்' என்ற கீழிலக்கம், அணு எடையின் கீழிலக்கம் என்பதில் அணுஎடை ம, என்றும் கீழிலக்கம் ய என்றும் கொள்க. இதனை 'நமய' என்று காட்டியுள்ளனர். இவ்வாறு சிவ என்பதன் விஞ்ஞான பொதுப்பெற்றியைப் பெரியோர்மேலும் ஆராய்வராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவ: சிறப்புவிளக்கம்.

### அ. பரா பொருள்: சி - வ

அணுத்தத்துவத்தில் ஒவ்வோர் அணுவும் மூன்று பகுதிகளாக அமைந்துள்ளன என்பர் விஞ்ஞானியர். இந்த மூன்று பகுதிகளின் நடுவாம் மையப்பகுதி 'ப்ரோடான்' 'சி' என்ற பங்காய் இருக்கிறது. இது சிறு சூரியனைப் போன்றது. இதில் பாசிடிங் (**Positive**) அல்லது நேர்மின்சாரம் உண்டு. இது விடாத எழுத்தாம் 'சி' வ்வில் 'வ' வ்வும் உண்டு என்பதற்கு நேராம். விடாத எழுத்தாம் பேசா எழுத்து 'சி' என்பதனைச் சிவ என்று எழுதிக் காட்டுதல் போல்வதுமாம். இஃது ஒளி முறைக்கும் பொருந்தும். ஹைட்ரொசன் அணுவில் ஒரேயொரு புரோட்டான் இருக்கிறது என்ற செய்திக்கு நமது மெய்ஞ்ஞானத்தில் "அவ்வொடு சவ்வு" என்பதைச் சொல்லலாம். ஹைட்ரொசன் அணு – அவ்வு. ஒரேயொரு புரோட்டான் – சவ்வு. ஹைட்ரொசன் என்ற ஒரு அணுவை (அவ்வு) ஓர் உயர்கோபுரமாக்கினுல் புரோட்டான் சவ்வு அதன் நடுவில் பறந்து கொண்டிருக்கும் ஓர் ஈயின் அளவாகும் என்பதிலிருந்து, சவ்வாம் சிவ்வு என்பதனை, "நோக்கரிய நோக்கே, நுணுக்கரிய நுண்ணுணர்வே" என்று மணிவாசகர் கூறியதன் விளக்கம் தெளிவாகின்றது. இது வெளி முறைக்குப் பொருந்தும், எனவே இது வவ்வில் சிவ்வுண்டு என்பதற்கே பொருந்துவதாகிறது.

*   *   *   *

புரோடானை (வ) ச் சுற்றி வெகுதூரத்தில் வட்டமிட்டுக் கொண்டிருக்கும் சக்தியாகிய (*ENERGY*) மற்றுேர் பகுதியாம் எலெக்ட்ரான் (***ELECTRON***) இஃது புரோடானை விட மிகமிகச் சிறியது. இதற்குக் கனம், உரு என்பதே இல்லை. இதில் நெகடிவ் (***NEGATIVE***) அல்லது எதிர்மின்சாரம் இருக்கிறது. இந்த எதிர்மின்சார சத்தியின் அளவும் புரோடானின் நேர் மின்சார சத்தியின் அளவும் சமம். எனவே "ஓர் அணுவில் எத்தனை புரோடான்கள் உண்டோ அத்தனை எலெக்ட்ரான் களும் இருக்கும். இவைகளுக்கு இடையே உள்ளது "ஒன்றுமே இல்லாத வெளி" யாம் இந்த விஞ்ஞான விளக்கத்தினை மெய்ஞ்ஞானத்தில் தேர்கையில் ஓர் அணு என்றது 'சி' என்க. புரோடானின் நேர் மின்சாரம் 'வ' என்க. எலெக்ட்ரானின் எதிர்மின்சாரம் 'ந' என்க. வ–ந ஒத்த ஒப்பு நிலையின. இதனைத் தொகுத்துக்காட்டின் 'ந–சி–வ' என்று அமையும். 'வ' புரோடானின் நேர்மின்சாரம் ஆதலின் 'சி' யின் இடமுன்னும் முன்னிலை பொருந்தியது. 'ந' எலெக்ட்ரானின் எதிர்மின்சாரம் ஆத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லின் 'சியின்' காலமுன்னுரும் பின்னிலே பொருந்தியது. இந்த ந-சி-வ என்ற அமைப்பால் ஓர் எழுத்தாம் பேசா எழுத்தென்ற 'சி' யின் அகத்து வனப்பு, அறிவு ஆற்றல் என்ற திறனுகைப் பரிணாம் கொண்டு ஞானம் கிரியை என்று பரிணுமமாகச் 'சி' யின் புறத்தில் முன்னுல் ஞானம் பின்னுல் கிரியை சமமாகச் சூழ்ந்து கொண்டது. 'சி'யின் அகத்துப் புரோடான் (வ) எலெக்ட்ரான் (ந) என்பவை ஒத்த ஒப்பாகி, இவை களுக்கிடையே ஒன்றுமே இல்லாவெளி சிதாகாசம் என்ற ஞானுகாசம் என்று மெய்ஞானியர் சுட்டியுரைத்தனர். இங்கே 'சி' யின் வனப்பு ஒளியாயும் வெளியாயும் ஒன்றலுற்று ஒன்றெனை அமைந்தது தேர்க. புரோடான், எலெக்ட்ரான் என்பன "ஒளி". இவற்றின் ஒன்றலின் இடையீடு "வெளி" என்க. 'சி' யில் வவ்வு புறத்தில் அண்மை. நவ்வுபுறத்தில் விஞ்ஞானப்படி சேய்மை நிலையதாம். இந்தப்பெற்றியிலேயே 'சி' என்பதைச் சிவ என்று செப்பினர்.

* * * *

நியூட்டான் என்பது அணுவின் மூன்றுவது பகுதி. இதனை ஆதார பகுதி என்பர். இதில் மின்சாரம் இல்லை. இது புரோடானை விடச் சற்றுக் கனமானது. இதன் மிகுதலிலும் குறைதலிலும் மூலப்பொருளின் தன்மை மாருது. ஆனல் இனப்பொருள் உண்டாகும். அதே இனத்தில் சற்று வன்மைப் பொருள் அல்லது மென்மைப் பொருள் தோன்றும் என்பர். நியூட்டானில் மின்சாரமில்லை என்பது நமக்குப் பேசாஎழுத்தையே நினைவுறுத்துகின்றது. இது'சி' எனக்காட்டுவதற்கு அமையும். எனவே புரோடான் எலெக்ட்ரான் என்பவை பேசும் எழுத்தாம் சிவ என்று காட்ட அமைவதாகும். நியூட்டான் மிகுதலாலோ குறைதலாலோ மூலப்பொருளின் தன்மை மாருது என்பதால் நியூட்டான் யகாரப்பொருளை நேர்வதாகும். யகாரப்பொருளின் மூலப்பொருள் சிவ. இது சிவய என்று ஒத்த ஒப்பாய் நின்றுலும், சிவ என்பதன் தன்மை மாருது. எனவே சிவ- பேரொளி; ய- சிற்றெளி என்பது பெறப்படும். ஆனல் இனப்பொருள் உண்டாகும் என்பது சிவ என்பது யகாரத்தை ஒட்டிக்கொண்டால் அந்த யகாரப் பெற்றியால் ந-ம என்ற இனஎழுத்து உருவை இலங்கவைக்கும். நம என்ற அந்த இனத்திலே கனத்த அல்லது இலேசான பொருள் தோன்றும் என்றது ய-சிவ அல்லது சிவ என்ற இயல்பு நீர்மையின் கண். ய-சிவ என்பது சிவய சிவ என்று முழுமையதாகும். சிவ என்பது சிவசிவ என்று முழுமையதாகும். எனவே நியூட்டான்என்பது சிவ என்பது சிவய என்று பரிணம் உற்று சிவயநம என்று பரிணுமம் ஆவதாகி இனப்பொருள் உண்டாகும் நிலைச்செய்தியை நமது ஞானஇயலில் விரித்து விளங்கப்பெரிதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி செய்கிறது. நியூட்டான் ஆன்மவிளக்கமானல் புரோட்டான் எலெக்ட்ரான் என்பவை பரஆன்ம விளக்கம் செய்வனவாகும். இனம் உண்டாக்கல் என்பதில் அரன்-அரி-அயன் என்ற சிவப்பகுதிகள் சீவப் பகுதிகளாகச் சேர்வதையும் ஈண்டுக் கொள்ளலாம். என்க.

* * * * *

அணுவின் முப்பகுதிகளில் புரோடானை இலயசிவன் என்றும், அருவமேனி என்றும் கொள்ளலாம். எலெக்ட்ரானைப் போகசிவன் என்றும் அருவுருவமேனியாகவும் நேரலாம். நியூட்டானை அதிகாரசிவன் என்றும் உருவமேனியாகவும் பாவனை பண்ணி விஞ்ஞானத்தையும் தத்துவத்தையும் ஒப்பீடு செய்யலாம் அன்றோ.

* * * * *

ஒரேயொரு புரோடானும் எலெக்ட்ரானும் அமைந்த அணு நைட்ரசன் அணு. புரோடானை இரண்டாக்கினுல் ஹீலியம் என்ற இரண்டாவது மூலப்பொருளாகும் என்ற விஞ்ஞானச்செய்தி நமக்கு இறங்கு வெளிமையத்தைத் தெளிவாக்குகின்றது. புரோடானும் (சி) எலெக்ட்ரானும் (வ) அமைந்த அணு வவ்வில் சிவ்விருப்பது. 'வ' இருப்பாகவும் 'சி' இருத்தலாகவும் அமைந்த ஒன்றே ஹைட்ரொசன் அணு என்றது. 'சி' என்ற புரோட்டானை இரண்டாக்கல் 'சி' என்றும் 'வ' என்றும் தனித்தமைதலாம், இதனுல் ஹீலியம் என்ற இரண்டாம் மூலப்பொருள் என்பது 'சி' தனக்குச் செயல் நிலேயில் துணையில்லாததால் 'வ' கரத்தை முன்னுக்கி தான் அதன் பின்னதாய் 'வசி' என்று காரிய சதாசிவமாகையில் 'வசிய' என்று தோற்றமாதலே ஒக்கும். இங்கே இரண்டாம் மூலப்பொருள் 'ய'வ்வு. முதலாம் மூலப்பொருள் 'வ'வ்வு இங்குள்ள 'ய'வ்வு ஆவிநிலேயது. நியூட்டான் இனப்பொருள் உண்டாக்கும் என்பதை 'ய'வ்வுப் பொருளில் வைத்துச் சொல்லின் 'ய' என்ற ஆன்ம இனத்திற் சொல்லலாம். அந்த ஆன்மா பூதங்களின் சாரங்களால் ஆக்கப்பட்ட தேவசரீரத்தை எடுக்கும்; அல்லது பூதங்களின் உருத்திரிபான பூதபரிணமம் என்ற பூமியில் எடுத்தும் உடம்பு பொருந்தும் என்பதையும் கொள்க. இவ்வாறு விஞ்ஞானப் பொருட்பெற்றிக்கும் தமிழ்மொழிப் பெற்றிக்கும் இயைந்த இசைவின் இயல்பு உணர்ந்தே நம்முன்ஞேர் அதனைச் செந்தமிழ்மொழி என்று செப்பிச் சிந்தை மகிழ்திருந்தனர் என்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில்.
2274

## பராசத்திப் பொருள் - வ, ய

பரம் பொருளின் சிவ என்ற ஈரெழுத்துப் பொருள் ந-சி-வ என்ற மூன்றெழுத்து வடிவாகும்போது, அதன் வடிவ முழுமையை நிறைவுபெறச் செய்கின்றது. இதனால் சிவப்பொருளைப்பர சிவப்பொருளென்று பகர்வர். இஃது விஞ்ஞானத்தில் அணுவின் முப்பகுப்பான புரோடான், எலெக்ட்ரான், நியூட்ரான் என்னும் அணுக்களால் அமைந்த மூலப்பொருளான யூரேனியம் ஆகக் கொள்ளலாம். ந-சி-வ என்ற நிலையான பரசிவப்பொருள் யூரேனியம். இந்த யூரேனியம் என்ற மூலப்பொருளில் ஒருவகை ஒளிச்சிதறல் ஏற்படுவதை விஞ்ஞானிகள் கண்டனர். இந்தச் சிதறலை ஆல்பா, பீடா, காமா, கதிர்கள் என்று வகைப்படுத்தினர். இந்தக்கதிர்கள் சிறு அணுத்துண்டுகளே. இவை ஒளியின் வேகத்தில் சிதறுவதே சுடர்விடுங் காரணமென்றுங் கண்டனர். இதனை நாம்பதிப்பொருளின் தடத்தலக்கணத்துக்கு ஏற்பக்காட்டலாம். யூரேனியத்தின் ஒருவகை ஒளிச்சிதறல் பராசத்தி. இந்த ஒளிச்சிதறல் ஆல்பா, பீடா, காமா என்ற கதிர்வகையைப், பராசத்தி உயிர்களுக்கு மலபரிபாகம் உண்டாதற் பொருட்டு ஐந்தொழில் செய்தலைக் குறித்துச் சிறப்பு வகையாற் செயற்படுங்கால் இச்சை, ஞானம், கிரியை என மூத்திறப்படுதலுக்கு ஒப்பிடலாம். சிவன் இச்சத்திகளைப் பொருந்தும் பொழுது சத்திகாரியமான அருட்டிருமேனி அருட்சியுறலுக்கு யூரேனியக் கனிப்பொருள்களில் மிகுதியாக ஒளியைச் சிதறும் மூலப்பொருளாம் ரேடியம் என்பதைச் சுட்டலாம். இனி யூரேனியம், ரேடியம் போன்ற மூலப்பொருள்களில் காணும் ஒளிச்சிதறல் அணுப்பொடிச் சிதறலே என்பதன் பொருள் என்ன? இவைகள் அழியாத மூலப்பொருள்கள் அல்ல, மாறும் மூலப்பொருள்கள் என்பதே. ரேடியம் ஒளிச்சிதறலாய் ரேடான் என்ற வாயு மூலப்பொருளாகிறது. இவ்வாறே மாறிக்கொண்டுபோய்க் கடைசியில் இஃது ஈயம் என்ற மூலப்பொருளாவதைக் கண்டறிந்தனர். இந்த மாறுதல் சிவத்தின் அருட்டிருமேனி மாறுதல்போல்வது, யூரேனியக் கனிப்பொருள் ரேடியமாய் மாறி அது ரேடான் என்ற வாயுவாய் மாறி ஈற்றில் ஈயமாக மாறுதல் போன்று சிவனார் ஞானசத்தியைச் சேர்ந்து அருவத்திருமேனி கொள்வர். இந் நிலையில் இலயசிவன் எனப்படுவார். ஞானம் கிரியை சமமாகப் பொருந்திய நிலையிற் சிவன் அருவுருவத் திருமேனியுடையராய் அருளோன் எனவும் சதாசிவன் என்றும் போகசிவன் என்றும் கூறப்படுவர். சிவனார் ஞானம் குறைந்த கிரியைமிகுந்துள்ள வேளையில் உருவத்திருமேனி கொள்ளும் நிலையில் மகேசுவரன், அதிகாரசிவன் எனப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுவர், சிவம் - சதாசிவம் - மகேசுவரன் இவைகளுட் பேதம் இல்லை சத்திகளின் தொழில் வேறுபாட்டால் பேதமுடையவர்களென்று உபசாரமாகச் சொல்லப்படும். இதிலிருந்து தடத்தநிலையான சிவப்பொருள் (அணு) மாறுப்பொருளன்று; ஒருவகையில் மாறும் பொருட்கூட்டம் என்பதாம், யூறேனியம் - இலயசிவன். இந்தச் சிவதத்துவம் போக சிவனுய் (றேடான்) அதிகாரசிவன் (ஈயம்) ஆனுற்போல யூறேனியம் றேடான் ஆகி ஈயமும் ஆகும். இந்த மூன்று மூலப்பொருள்களின் தன்மை யூறேனிய அணுவில் அமைதலாக வேண்டும். சிவதத்துவமான இலயசிவத்தில் போக அதிகாரதத்துவத் தன்மைகள் எல்லாம் ஒடுக்குவர் என்ற சிவதத்துவம் செய்திக்கு நேராகும். இவ்வாறு பராசத்திப் பொருள் விஞ்ஞானத்தை மேலும் ஆராய்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவுரை

ஒருமைப் பொருளாம் ஒளி 'சி' என்ற பேசா எழுத்தால் குறிக்கப் பட்டது. அந்த சியொளி நிற்கையில் "ஒளிவெளி என்றும், அந்த நிற்கை நிலையாகையில் "வெளிஒளி" என்றும் கொள்ளப்படும். நிற்கையை இயல் என்றும், அதன் நிலையை இயல்பு என்றும் சொல்லலாம். நிற்கையாம் இயல் என்ற 'ஒளிவெளி' சிவ என்ற இணையது நிலையாம். இயல்பு என்ற "வெளிஒளி" சி — வ என்ற துணையாம். இணையாம் சிவ என்பதில் 'வகரம்' தத்துவமற்றது. இதனால் ஒளிவெளியும் அங்ஙனமானது என்று எண்ணுக. துணையாம் சிவ என்பதில் வகரம் தத்துவடையது. எனவே "வெளிஒளி" யினை அங்ஙனமே அறையலாம். ஈண்டு நமக்குத் தத்துவமுடைய வெளிஒளி என்ற பொருளின் நிலையே ஆய்வுக்குரியது. வெளிஒளி வேறற்று நிற்கையில் ஒருமைப்பொருள். வேறும் நிலைக்கையில் வெளியும் அதில் வெளிப்படும் ஒளியும் என்று ஒருமையுள் ஒன்றிய இருமையாகும். இதனை ஆதார ஆதேயமுறையது எனலாம். வெளி இருப்பு என்ற ஆதாரம். ஒளி — இருத்தல் என்ற ஆதேயம். வெளி ஒளியின் ஒருமையானது காரண இயல். இருமையானது காரிய இயல். இந்த இயலின் திறன் பேணாது நாம் பேதப்படுவது உயிர் உடைமையின் ஊனமாகும்.

வெளிஒளி என்று உம்மைதொகையுறல் தொகுபொருட் தோற்றம். உம்மை விரிவுறுவது பகுபொருட் தோற்றம். இந்த இருதோற்றங்களில் பண்பு — வெளிமை. பண்பாடு — ஒளிமை, எனவே வெளிஒளியின் தோற்றங்களின் வெளிமை இறுபொருள். ஒளிமை இறைபொருள் இறைமையாம் ஒளிமை வெளிமையாம் இறுமையிற் பொருந்துங்கால் இறைமை ஒளி வெளிமையின் இறுபொருளைக் கிளர்வுறுத்துகிறது. அந்தக் கிளர்வுறுத்தலில் வெளிப்பட்ட வெள்ளொளியினையே ஆன்றோர் 'ய' என்று குறிமுறை செய்தனர். இதனையே 'சிவய' என்று மூவெழுத்து ஒருமொழியாய்க் கொள்ளப்பட்டது. இந்த மூவெழுத்தில் 'சிவ' என்று ஈரெழுத்தொளி செவ்வொளி என்றும், அதனை யொட்டிய யகர ஒளி அச்செவ்வெளியின் ஒத்த ஒப்புக்கு ஒவ்வாமையால் அதனையே வெள்ளொளி என்றும் பொருட்பெற்றியிற் தேர்ந்தனர். சிவய என்று மூவெழுத்து ஒரு மொழியாகையில் யவின் ஒளி சிவஒளிமையில் கரவாகையில் இன்மைப் பொருளாகிறத. சிவ- ய என்று யகரம் ஒட்டாது ஒரு மொழி விடுவிட்ட நிலைகையில் அதன் வெள்ளொளி ஒளிர்வுற்று உள்மைப்பொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாய் நிலைப்படும். இந்தநிலை விளக்கமாகி இறுதல் பெறுதற்கு சிவ
என்ற செவ்ஒளியின் ஆற்றல் யகரப்பொருள் எல்லை நிலைக்குத் தாவிப்
பரவு பெறல் வேண்டும். அப்படிப் பரவல் பெற்றவெளியே பரவெளி
என்க. அவ்வெளியிற் பொருந்தியபொருளே 'ய' கரக்குறிப்பொருளாம்
இதனையே 'சிவய' என்ற ஒருமொழிப் பொருளாய் ஓதினர்.

யகரக்குறிப் பொருளாவதற்கே சிவ என்ற பொருளானது பொருள்
நிலையானது. பொருள் என்று கூறினுல் வேதாந்தமாகும் என்று
தெளிந்து கொள்க. சிவ என்ற பொருள் நிலையின் சார்பால் பொரு
ளான யகரக்குறியின் உள்ளது சிறத்தலாகும். யகரக்குறிப்பொருளான
தின் உள்ளமைந்த பொருண்மை சிறந்து செம்மை முறையில் இய
லுதல் வேண்டின், அஃது இருத்தலுக்குரிய பொருள் வேண்டும். அப்
பொருளின் பெயரே "பூதம்" என்பது. பூ–இருத்தல் அல்லது தோன்
றுதல். த–விகுதி. இந்தப் பூதம் ஐந்து திறனுனது, இந்த ஐந்து திற
னு பூதம்என்ற பொருளோ பொருள் உருவு திரிந்து பூமியில் எடுக்கும்
உடம்பாயும், அந்த உடம்புக்கு ஆதாரமாய் உலகமாயும் அவ்யகரக்
குறிப்பொருட்குப் பேதமின்றி அமைந்துள்ளது. இந்த அமைப்பைச்
சிவதத்துவச்சான்ருேர் 'சிவய' என்ற மூவெழுத்தையே சிவய – நம
என்றுஐந்தெழுத்தாய் முறையுற நிறுவி வெளிப்படுத்தியுள்ளனர்.

சிவய என்ற மூவெழுத்தில் சிவ – என்பது ஒளிவெளி எழுத்து.
'ய' – வெளிஒளி எழுத்து. இந்த வெளிஒளியில் யகரக் குறிநிலை குறிப்
பொருளாகக் கூர்தல் பெறப் பொருள்நிலையான சிவஒளி ஆற்றல் யகர
பொருளுக்குரிய மெய்மை வெளிஒளிக்கு அப்பாலாய்ப் பரந்தெழுந்து
ஒளிவெளியாய்ப் பொருந்த ஓங்கி விரிந்தது; இதனின் விளக்கக் குறி
எழுத்தே 'நம' என்பது.எனவே சிவய என்பது இதுபோது "சிவயநம"
என்று பெறலாயிற்று – இங்கு யகரம் நடுவுப் பொருளாய்ப் பொருந்திய
பேற்றுநிலை. யகரம் நம இருள்ஒளி இயலால் ஈர்ப்புண்டு நடுமை நழுவி
நலத்த மலத்தில் நலிவு கொள்ளும் இந்த நலிவு இயக்கத்தில் யகரம்
இயைந்து இயங்க இசைவான இருப்புப்பொருளாக நிலம்தாங்கும் எழுத்
தாய்ப் பொருந்துவது நகரமும் அதனை ஒட்டிய மகரமும் என்க.
இதனுலேயே 'சிவயநம' என்பது 'நமசிவய' என்று இடமுன் எழுத்தைக்
காலமுன்எழுத்தாகச் சிவஞானத்தோர் நிறுவி உலகுக்குரிய ஐந்தெழுத்
தாக நமக்கு நல்கினர். எனவே உவகம் உள்படலுக்கு நமசிவய என்
பதும், அதன் வெளிப்படலுக்குச் சிவயநம என்பதும் பொருந்தும்
ஐந்தெழுத்தாயிற்று. உலக உட்படலில் நிலந்தாங்கும் எழுந்து 'ந' என்
பதால் ம – நீர் எழுத்து, சி–தீயெழுத்து, வ–விண்எழுத்து ய–காற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூல் நிலையம், நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்.



ஆகிய உயிர் எழுத்து என்று பூதநெறியிற் தேர்க; இவைகளுக்கெல்லாம் ஒப்பில்லாத எழுத்து வகரத்தை தன்னுள் கரந்து கொண்டு வனப்புற்ற 'சி' என்ற பேசா எழுத்தாம். இது தீயினைச் சுட்டாது. இந்த சிகார எழுத்து வடிவினராகிய பேரொளிப்பிளப்பினனே ஒள்ளி. ஒள்ளியோன்; இறையோன் என்று விதந்தது. சி என்ற செவ்ஒள்ளானது ஒளிவெளியாகி, சிவஎன்று வெளிஒளியாய்ப் பாகப்பட்டு, சி-வ-ய என்ற வெளியும் வெளிஒளியுமாப் பரப்பொருளாய்ப் பரந்தெழுகையில் சிவ-ய என்று இடையீடு இசைகையில் அந்த இசைத்திறனால் சிகாரச் செம்பொருள் சக்திவிட்டுக் கூத்தனாய்க் கூர்த்தலாகையில் வகரவடிவப் பொருளும் அதில் ஈர்ப்புற்று கடைக்கண் பொருந்தவே அம்பலவாணனாகி விடுவர். இதனால் யகர ஒளியும் வெளியும் நிலம் - நீர் - தீ - காற்று - வான் - திங்கள் - ஞாயிறு - ஆருயிர் என்று எண்பெரும் வடிவப்பொருளாக உலகம் பொருத்தி நிற்குமென்க. நிற்க;

நமசிவய - உலகமந்திரம். எனவே. இருளுடையது இதில் நடுவான சிகாரம் இருள்ஒளியுடையது. இருள் - ம. ஒளி - வ. எனவே உலகம் இயல்பாகவே இருளுடைப்பொருள் போன்றது. அப்பொருள் இயங்கையில் இருளும் ஒளியுமாக இலங்கிறது. சிவயநம - உயிர்மந்திரம் ஒளி இருள் ஆகநிலைபெறும் சிகாரத்தை முதலாகவுடையதால் அஃதும் அவ்வாறான பொருளே. இதனை இயல்பாக உடைய உயிர் சிகார மந்திரத்தில் நாடுவனதாக நிற்றலால் சிகாரத்தின் ஆற்றலை வகரத்தாற் பெற்று ஞானமாம் மறையா ஒளியும் மகரத்தின் ஆற்றலை நகரத்தாற்பெற்றுக் கிரியையாம் மறைஒளியையும் துணைக்கொண்டு சீவனச்சீர் செம்மைப்படும் என்க. யகரத்தின் மூன்று குத்துக்கோடு சிகராதி ஐந்தெழுத்தில் வயந் - மாகவே நேர்தல் வேண்டும் அவ்மூவெழுத்தும் மூன்று நாடிகளாக நேர்ந்து அவைகளுக்குரிய மூச்சுக்காற்றாக தேர்தலே முறையாம். வகரநாடி சிகாரத்தோடு இயைததால் 'அர' என்றும் நகரநாடி மகரத்தோடு இயைதலால் கர என்றும் நடுவான யகர நடுநாடியில் மூச்சு அ(ரக)ர அடைப்புக்குறியில் உள்ளதுபோல் 'ரக' என்று தலைதடுமாறிய மூச்சாற்றல் நெறிமுறையால் மாற்றில் உள்ளேஉள்ள கரத்தல் நீங்கலாகவே வெளியுள்ள 'அர' நியமமாகும். இந்த நியமத்தில் நிலைத்தவர் நீடுவாழ்வர் என்க. சுடர்கின்ற கோலத்தீயே யென யன்று சிற்றம்பலவர்" என்ற மணிவாசகர் வாக்கை மூலாக்கினியானது முகிழ்க்கும் என்க. அதாவது 'ரக' என்பது 'கர' என்று நேர்வுற்றால் அகரமுதல் எழுத்து ஆக்கமாகும். எஞ்சியபுற "ர"கரம் ஆகாரமாகப் பரிணாப்படும். பரிணமான ஆகாரமே ஏனைய எழுத்தாகப் பரிணப்படும் இவ்வாறு அம்மூலாக்கினியின் ஒல் ஒலி பிரிந்திசையாகப்பண்ணுதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாகும் என்க. பரவெளியின் பரநிலைவெளியாம் பரவுச்சியின் மேல் வெளியையே விதந்து சுட்டி நிற்கும். அவ்வெளியின் ஞானம் கணித்தல் ஆன்மா அறிவினால் ஆகாதது. ஆன்மா, பரஆன்மா ஆன்தின் பின்னர் பரஆன்ம ஞானங்கொண்டு அறிதல் இயலும் என்று நமது தத்துவ நோக்கில் கருத்துறலாம். வி = இன்மை எனக்கொண்டு இன்மைஞானம் என்ற கருத்து நோக்கில் மண்ணுகையில்,

"தத்துவன் எங்குண்டு தத்துவன் அங்குண்டு
தத்துவம் எங்கில்லை தத்துவன் அங்கில்லை"

என்னும் திருமூலர் திருவாக்கையே எண்ணவேண்டியுள்ளது. இன்மை எல்லாமை; வறுமையாகிப் பின்னர் வெறுமையாகப்போகும் வெற்றியே இல்லாமையாம். எனவே கருதலளவைக்கும் சுடுகளவாவது இடங் கொடுக்காது காட்சியளவைக்குமட்டுமே இடங்கொடுக்கும் விஞ்ஞானத்தால் நாம் பெறும் ஞானம் இன்மையானதே என்று தெளிவுறல் வேண்டும். எனவே விஞ்ஞானத்தால் நாம் சிறப்புவிதி பெறமுடியாது, பொதுவிதியும் அற்பமாகவே பொருந்தும் என்று தெளிக. திருவருளால் மெய்யென்று கூறப்படும் வி (மேலான) ஞானமே சிறப்புவிதி களின் - தத்துவங்களின் உண்மையை உணர்த்தத்தக்கது. எழுத்தறிவித்தவன் இறைவனாவான்' என்பதை இந்த ஆய்வுரை கஞ்சிக்குள் பயறுபோற் காட்டுகின்றது. தத்துவ உண்மை அறிதலாவது, அவைகள் காரியப்பொருள் (விஞ்ஞானம்) என்றும், அறிவின்மை என்றும் ஆண்டானாகிய மகேசனால் உளதாகி மாயையினின்றும் படைக்கப் பட்டதென்றும் அவன் (மாயோன்) தம் உடைமைகளென்றும், தோன்றிமறையும் தன்மையது என்றும், நமக்கு இறைவன் அளித்த இரவல் பொருள்கள் என்றும் உணருதலாம். அங்ஙனம் உணருங்கால் அவற்றைப் பொருளாக உடைய பொருளோனாகிய சிவபெருமானும் ஆங்குத் தோன்றிக்காட்சியருளுவர். அவனே சத்துவனுவன், சத்துவனைத் தத்துவ அருளால் தத்துவம் அறியும் ஆருயிர்கள் அனைத்தும் தத்துவனுக்கே மீளாஅடிமைகளாகும். இவ்வகையுண்மையினை உணராதார் தத்துவ உணர்ச்சி இலராவர். தத்துவ உணர்ச்சி எங்கு இல்லையோ அங்குத் தத்துவனாகிய சிவபரம் பொருளின் அருள்விளக்கம் உண்டாதல் இல்லை. இவ்வகைய தத்துவ ஞானத்தின் தன்மை அறிந்த பின் தத்துவனாகிய சிவஅரும்பொருள் அந்த ஞானத்திலே உருவாகப் பொருந்திக் காட்சியளிப்பன் என்று நாம் தேறுவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org